விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 228 வள்ளுவர் ஆண்டு 2057 ஆடி 19 செவ்வாய்க்கிழமை (04.08.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுகள் இன்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியின் 3ஆம் கட்டத்தின் நான்காம் பகுதி அகழ்வுப் பணிகள் இன்று (04) செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பமாகவுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை 56 நாட்கள் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில் இதுவரை, 42 நாட்கள் 15ஆம் பக்கம் பார்க்க

## சீரற்ற வானிலையால் சிதைந்தது நுவரெலியா

### இதுவரை 2,331 பேர் பாதிப்பு
### இருவர் மரணம்; அறுவர் மாயம்



15ஆம் பக்கம் பார்க்க

### பேராதனைப் பல்கலையின்
## கற்றல் செயற்பாடுகள் இடைநிறுத்தம்

(பேரதெனிய)

நிலவும் சீரற்ற வானிலையைக் கருத்திற் கொண்டு, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அனைத்துக் கல்வி 15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கு வருகை தரவுள்ள தமிழகத் தொழிலதிபர்கள்

(சென்னை)


தமிழ்நாட்டில் உள்ள தொழிலதிபர்கள் மற்றும் வணிகத்தலைவர்கள் 20 பேரை உள்ளடக்கிய குழுவினர், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16 - 24ஆம் திகதி வரை வர்த்தகத்துறைசார் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்ளும் நோக்கில் 15ஆம் பக்கம் பார்க்க

- புதிய அரசியலமைப்பு உருவாக்கம்
- நிறைவேற்று அதிகார ஒழிப்பு
- பொதுமக்களின் காணி அவர்களுக்கே

# தமிழ்க் கட்சிகள் சந்திப்பில் ஜனாதிபதி அநுர குமார உறுதி

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை இல்லாதொழிப்பதே எமது அரசாங்கத்தின் நிலைப்பாடு எனத் தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பொதுமக்களின் காணிகள் அவர்களுக்கே சொந்தமானது என்றும் தெரிவித்தார். (02ஆம் பக்கம் பார்க்க)



## இயக்கச்சியில் விபத்து குடும்பப் பெண் பலி



(இயக்கச்சி)

கிளிநொச்சி - இயக்கச்சிப் பகுதியில் நேற்று (03) திங்கட்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் சமூகசேவையாளரான குடும்பப்பெண்ஒருவர் உயிரிழந்துள்ளார். 15ஆம் பக்கம் பார்க்க

### இரணைமடு குளப் பகுதியில்
## எரிந்த நிலையில் சடலமொன்று மீட்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடு குளப் பகுதியில் நேற்று (03) திங்கட்கிழமை எரிந்த நிலையில் சடலம் ஒன்று இனங்காணப்பட்டுள்ளது.


இரணைமடுக்குளத்தைப் பார்வையிடச் சென்ற சுற்றுலாவிகளாலேயே குறித்த சடலம் இனங்காணப்பட்டு அது 15ஆம் பக்கம் பார்க்க

### க.பொ.த உயர்தரப் பரீட்சை
## வகுப்புகளுக்கு இன்றுடன் தடை

(கொழும்பு)

இன்று (04) செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் க.பொ.த உயர்தரப் பரீட்சார்த்திகளுக்கான தனியார் வகுப்புக்களை ஏற்பாடு செய்தல் மற்றும் நடாத்துதல், பாடம் தொடர்பான ஆலோசனைகள், கருத் 16ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்தில் விளையாட்டுத் துறை அபிவிருத்திக்கு சிலர் முட்டுக்கட்டை



### அமைச்சர் சுனில் குமார கமகே அதிருப்தி

(சங்கானை)

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ள உள்ளக விளையாட்டு அரங்கிற்காக ரூபா 160 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான நிதி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்த விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சுனில் குமார கமகே, குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக மக்களுக்காகப் 04ஆம் பக்கம் பார்க்க

## நாளுக்கு நாள் தீவிரமடையும் டெங்கின் கோரத் தாண்டவம்

- கர்ப்பிணித் தாய் பலி
- 86,386 பேர் இதுவரை அடையாளம்

(கொழும்பு)

நாட்டில் தீவிரமடைந்து வரும் டெங்குக் காய்ச்சலினால், வாதுவைப்பகுதியைச் சேர்ந்த 7 மாதக் கர்ப்பிணித் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடும் காய்ச்சலினால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுத் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்க்...

தமிழ் பேசும் ஆறு அரசியல் கட்சிகளின் ஒன்றிணைந்த கூட்டணியின் தலைவர்களுக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாக்கவுக்குமிடையிலான சந்திப்பு நேற்று திங்கட்கிழமை(3) ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இச் சந்திப்பின் போது,

முழுமையான அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவருதல், மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்தும் அது தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்கள் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் மலையக சமூகம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் குறித்த பிரதிநிதிகள் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

இதன்போது மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் விசேடமாகக் கலந்துரையாடப்பட்டதுடன், மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது தொடர்பில் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது எனவும், எழுந்துள்ள சிக்கல்கள் தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் அரசியலமைப்புக் குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ சுமந்திரன் பிரஸ்தாபித்த போது,

அது குறித்துக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பதுடன், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு. எனினும், இந்தச் சந்தர்ப்பத்தில் அவசரமாகக் கொண்டுவரப்படும் அரசியலமைப்புத் திருத்தத்தை விட, புதிய மக்கள் ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக் கொள்வதே அவசியமாகும் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்கான கருத்தாடலைத் தொடங்குவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

பல்வேறு சமூகப் பிரிவினரும் தமது தேவைகளுக்காக மாத்திரம் செயற்படுவதைத் தாண்டி, இலங்கையர்களாக ஒன்றிணைந்து செயற்படும் நாட்டை உருவாக்கும் அடித்தளம் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, கடந்த காலத்தில் நாட்டில் எந்தவொரு இனவாத மோதல்களும் இடம்பெறவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார். பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறும் முறையான ஆட்சி முறைமையே தனது எதிர்பார்ப்பு எனவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

இந்திய உதவியின் கீழ் மலையக மக்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுத் திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், அந்த மக்களுக்கு வீட்டுரிமை கிடைத்த போதிலும், நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களைச் செலுத்துவது உள்ளிட்ட வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் அவர்கள் பல நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்வதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் (CWC) ஜீவன் தொண்டமான் சுட்டிக்காட்டினார்.

அந்த மக்களுக்கு பொருளாதார நிவாரணம் வழங்குவதற்காக தொண்டமான் அமைப்பையும் நெவிடா அமைப்பையும் இணைத்து புதிய வேலைத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு ஏற்கெனவே முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சுக்காக இவ்வருடம் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை விட அதிகமான தொகையினை 2027 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கு மற்றும் மத்திய மலைநாட்டில் நிலவும் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மக்களின் காணிகள் மக்களுக்கே சொந்தமாக வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு என்றும் அதற்காக ஆணைக்குழுக்களை நியமிப்பது உள்ளிட்ட பல சாதகமான நடவடிக்கைகள் இதுவரையில் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், போரினால் வீடுகளை இழந்த மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வாக, அந்த மக்களுக்கு இரண்டு கட்டங்களின் கீழ் 13,000 வீடுகளை நிர்மாணிப்பதற்காக 2027 மற்றும் 2028 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டங்களில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

டித்வா அனர்த்தம் காரணமாக வீடுகளை இழந்த மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த வீடுகள் நிர்மாணிக்கப்படும் வரை தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, அந்தப் பணிகள் நிறைவடையும் வரை அந்த மக்களுக்கு வாடகை வீட்டுக் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் முறை மற்றும் எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் பணிகள் குறித்தும் இங்கு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்ததுடன், தொல்பொருள் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம், மகாவலி அதிகார சபை போன்ற நிறுவனங்கள் பழைய கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுவதால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் முகங்கொடுக்க நேர்ந்துள்ள பிரச்சினைகள் குறித்தும் பிரதிநிதிகள் ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்தினர்.

இச் சந்திப்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ACMC) சார்பில் அதன் தவிசாளர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.எம். தாஹிர், என்.பி.எம்.எம். தாஹிர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (CWC) சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் (DTNA) சார்பில் செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ்பிரேமச்சந்திரன், முருகேசு சந்திரகுமார், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் (ITAK) சார்பில் எம்.ஏ. சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம், இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் (SLMC) சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம் மற்றும் நிசாம் கரியப்பர், தமிழ் முற்போக்கு கூட்டணியின் (TPA) சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் வி. ராதாகிருஷ்ணன் மற்றும் பரத் அருள்சாமி ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். (ந-7)

## கொக்குவில் அச்சுக்கூட வீதியில் பல்கலை. மாணவர்கள் பாட்டுக் கலாட்டா

### அப்பகுதி மக்கள் கடும் விசனம்

(கொக்குவில்)

கொக்குவில் அச்சுக்கூடப் பகுதியில் தங்கியுள்ள வெளி மாவட்டங்களைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இரவு நேரங்களில் தாம் தங்கியுள்ள வீடுகளில் இருந்து கொண்டு தாளம் போடுவது, பலத்த குரலில் பாடுவது, ஆடுவதால் அப்பகுதி மக்கள் கடும் அசௌகரியத்திற்கு ஆளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு குறித்த மாணவர்களின் மேற்போந்த நடவடிக்கையால் அருகிலுள்ள வீடுகளில் இருக்கும் பாடசாலை மாணவர்கள் இரவு நேரங்களில் படிக்க முடியாத துர்ப்பார்க்கிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-7)


# INVITATION FOR BIDS (IFB)

## Kilinochchi District Secretariat works

The Chairman of Departmental Procurement Committee of Kilinochchi District Secretariat invites sealed bids from interested eligible and qualified bidder for the Works mentioned in the table from qualified bidders who possess CIDA registration for the grade given below.

1. Bidding will be conducted through **National Competitive Bidding** according to the Procurement guideline & Manual 2024
2. A complete set of Bidding Documents may be obtained from 04.08.2026 to 17.08.2026 between 09:00 hrs and 15:30 hrs on working days upon payment of a non-refundable fee to the District Secretary, Kilinochchi.
3. The duly completed Bids must be delivered to **"Chairman, Departmental Procurement Committee, Kilinochchi District Secretariat, Kilinochchi"** or deposited in the "Procurement Box" available in the **Chief Accountant's Room, Finance Branch** on or before **10.00 Hrs on 18th of August 2026.** Bids will be opened immediately after the closing of bids. Bidders or their authorized representatives are allowed to be present at the time of opening of the Bids.
4. Bidders shall submit only the purchased bid document.
5. A Pre Bid Meeting will be held on **12.08.2026 at 10.00Hrs** at Conference Hall, District Secretariat, Kilinochchi.
6. All rights are reserved to the Chairman of DPC to accept, reject or partially accept of any bids at any stage without paying any compensation to any party.

| Description of Works | Estimated civil Cost Rs Mn. (without VAT in Mn) | CIDA Grade & Specialty | Contract Period (in Days) | Non-Refundable Fee. | Bid Validity Period | Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Amount (Rs.) | Validity |
| Retaining Wall & Earth Filling Work of Painthamil Sports Club to Anaivilunthankulam, Kilinochchi KN/DS/ADS/DSDO/SPORTS/W/01 | 6.25 | C8 ,C7 and C6 Building | 60 | 3,000 | 03.11.2026 | 100,000 | 01.12.2026 |
| Renovation of Play Ground -Stage I at KN/Masar GTMS KN/DS/ADS/DSDO/SPORTS/W/02 | 3.74 | C9 ,C8 and C7 Building | 60 | 2,000 | 06.10.2026 | 60,000 | 03.11.2026 |
| Fencing and Earth work to Ilantharakai Sports Club Playground at Tharmapuram West KN/DS/ADS/DSDO/SPORTS/W/03 | 4.10 | C8 ,C7 and C6 Building | 60 | 2,000 | 06.10.2026 | 70,000 | 03.11.2026 |
| Development Works of Play Ground at Akkarayan Maha Vidyalayam KN/DS/ADS/DSDO/SPORTS/W/04 | 5.08 | C8 ,C7 and C6 Building | 60 | 3,000 | 03.11.2026 | 80,000 | 01.12.2026 |

Chairman,
Departmental Procurement Committee,
Kilinochchi District Secretariat, Kilinochchi,
T.P/ Fax:- 021 228 5352,
Web : http://kilinochchi.dist.gov.lk



## உடுவில் இந்து இளைஞர் மன்றம் ஆசிரியர் விண்ணப்பம் கோரல்

**01. முன்பள்ளி ஆசிரியர்**
**02. அறநெறிக் கல்வி ஆசிரியர்**
(சேவை நோக்கில்)

கல்விப் பொது சாதாரண தரத்தில் சித்தியடைந்த சைவசமய பாரம்பரியத்தைக் கொண்டவர்கள் சுயவிபரத்தை முழுமையாகப் பூர்த்தி செய்து **"செயலாளர், உடுவில் இந்து இளைஞர் மன்றம், பாலர் பாடசாலை, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் மேற்கு, சுன்னாகம்."** என்னும் முகவரிக்கு 18.08.2026 ஆம் திகதிக்கு முன்னர் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்,
உடுவில் இந்து இளைஞர் மன்றம்.

(83307)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர்களுக்கான காப்புறுதி விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்

## பிரதியமைச்சர் கௌசல்யா தெரிவிப்பு

(வவுனியா)

**ஊடகவியலாளருக்கான காப்புறுதி திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்த உள்ளதாக வெகுஜன ஊடகத்துறை பிரதி அமைச்சர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பின் வவுனியா ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊடகவியலாளருக்கான காப்புறுதி திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்தவுள்ளோம். அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை விரைவில் கொண்டு வரவுள்ளேன். இதனை ஒரு வருடத்திற்கு மட்டும் வழங்காது தொடர்ச்சியாக வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களுக்கான புலமைப்பரிசில்கள், கடன் திட்டங்கள் வழங்குவது தொடர்பில் ஊடகவியலாளர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை நாம் பரிசீலித்து சிறந்த தீர்வினை வழங்கவுள்ளோம்.




கலைஞர்களுக்கான வீட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தும் போது ஊடகவியலாளர்களுக்கும் வீட்டுத்திட்டத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் கடத்தப்பட்ட மற்றும் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பான பிரச்சினைகள் 20 வருடங்களுக்கு மேலாக உள்ளது. அவர்களுக்கு நீதியைப் பெற ஆதாரங்கள் பல இல்லை. அவற்றை திரட்ட வேண்டியுள்ளது. அவை தொடர்பான விசாரணைகள் இடம்பெறும். ஆதாரங்கள் தேவை. அதன் மூலமே நீதியைப் பெற முடியும்.

வடக்கில் மட்டுமன்றி தெற்கிலும் பல ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டும் உள்ளார்கள். எனவே இதனை நாம் வடக்கு, கிழக்கு, தெற்கு என வேறுபாடுகளின்றி அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் நீதியை பெற்றுக் கொடுப்போம் என தெரிவித்தார். (8)

# யோஷித ராஜபக்ஷ மற்றும் வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்





(கொழும்பு)

ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ மற்றும் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட ஆகியோருக்கு எதிராக கையூட்டல் ஒழிப்பு ஆணைக் குழுவினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதிகளுக்கு எதிராக கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் 8 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குற்றப்பத்திரிகைகள் தற்போது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், குற்றப் பத்திரிகைகளை கையளிப்பதற்காக பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்தினால் விரைவில் அழைப்பாணை அனுப்பப்படவுள்ளது. (8)

# இலங்கையின் வாகன இறக்குமதி செலவு 182 மில்லியன் டொலராக குறைவு



(கொழும்பு)

இலங்கையில் மோட்டார் வாகன இறக்குமதிக்கான செலவினம் கடந்த ஜூன் மாதத்தில் 27.1 சதவீதம் வரை குறைந்துள்ளதாக, இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.


அதன்படி, ஜூன் மாதத்தில் வாகன இறக்குமதிக்காக 182 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன.

இந்த வீழ்ச்சியானது தனிநபர் பயன்பாட்டு வாகனங்கள் மற்றும் வர்த்தக ரீதியிலான வாகனங்கள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் இந்த வீழ்ச்சி பதிவாகியிருந்த போதிலும், நடப்பாண்டின் முதல் அரையாண்டில் வாகன இறக்குமதிக்காக ஒட்டுமொத்தமாக 1.25 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன.

எனினும், கடந்த 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் வாகன இறக்குமதிக்காகச் செலவிடப்பட்ட 1.57 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில், இது குறிப்பிடத்தக்க அளவிலான குறைவு என்பது குறிப்பிடத்தக்கது. (8)

# இரு பேருந்துகள் மோதி விபத்து 18 பேர் வைத்தியசாலையில்



(கொழும்பு)


கேகாலை - கரடுப்பன சந்தியில் நேற்றைய தினம் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும் தனியார் பேருந்தும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்தில் 18 பேர் காயமடைந்து கேகாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8)

# கச்சாய் எண்ணெய் விலையில் திடீர் வீழ்ச்சி

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலைகள் நேற்று சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளன.



இதற்கமைய, ப்ரெண்ட் ரக கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 83.67 அமெரிக்க டொலராகவும், WTI ரக கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 80.27 அமெரிக்க டொலராகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

எவ்வாறாயினும் மேர்பன் ரக கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 1.6 சதவீத அதிகரிப்புடன் 85.49 அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (8)

# நாட்டில் உள்ள அனைத்து சிறைச்சாலைகளுக்கும் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)


மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட வன்முறையைத் தொடர்ந்து, நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்துச் சிறைச்சாலைகளிலும் பாதுகாப்புத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அசம்பாவிதங்களைத் தவிர்ப்பதற்காக வெலிக்கடை, மெகசின், களுத்துறை மற்றும் நீர்கொழும்பு ஆகிய சிறைச்சாலைகளின் மீது மேலதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சஜீவ மெதவத்த கூறியுள்ளார்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது, கைதிகள் சிலர் தப்பிச் செல்ல முயன்றதுடன் கட்டடங்களுக்கும் தீ வைத்துள்ளனர்.

அத்துடன் சிலர் காயமடைந்ததுடன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் விசேட அதிரடிப் படை மற்றும் முப்படையினர் இணைந்து முன்னெடுத்த கூட்டு நடவடிக்கையின் மூலம் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8)



உடுப்பிட்டி தெற்கு பண்டகைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா நேற்று திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (படம்:மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கை- இந்திய டெஸ்ட் பும்ராவிற்குப் பதில் நபி



இலங்கைக்கு எதிராக நடைபெறவுள்ள இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலிருந்து விலகிய ஜஸ்ப்ரீத் பும்ராவிற்குப் பதிலாக, ஜம்மு-காஷ்மீரைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் ஆகிப் நபி இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதன்படி, இந்திய டெஸ்ட் அணியில் இடம்பெறும் வாய்ப்பைப் பெறும் ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த மூன்றாவது கிரிக்கெட் வீரர் ஆகிப்நபி ஆவார்.

இதற்கு முன்னர் பர்வேஸ் ரசூல் மற்றும் உம்ரான் மாலிக் ஆகியோர் வெள்ளைப் பந்து போட்டிகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளனர்.

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியின் போது பும்ராவின் இடது முழங்காலில் ஏற்பட்ட காயத்திற்குப் பின்னர், பெங்களூருவிலுள்ள தேசிய கிரிக்கெட் கல்லூரியில் அவர் தீவிர சிகிச்சை பெற்று வந்தார்.

இருப்பினும், முழங்காலில் தொடர்ந்து அசௌகரியம் உணரப்படுவதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவரைத் தொடரிலிருந்து விலக்க இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை மருத்துவக் குழு தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில், சுப்மன் கில் தலைமையிலான இந்திய அணி பங்கேற்கும் முதலாவது டெஸ்ட் போட்டி வரும் ஆகஸ்ட் 15 ஆம் திகதி காலி மைதானத்தில் ஆரம் பமாகவுள்ளமை குறிப்பிடத்தக் கது. (க-8)

## யாழ்ப்பாணத்தில்...

பணியாற்றுவதாகக் கூறும் சிலர், நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் சங்கானைப் பகுதியில் நேற்று முன்தினம் (02) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர், யாழ்ப்பாண மாவட்டத்தின் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக பல்வேறு பாரிய திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

பிரதேச மற்றும் கிராம மட்டங்களில் வாழும் இளைஞர்களுக்கு விளையாட்டில் ஈடுபடுவதற்கான சமமான வாய்ப்புகளை உருவாக்குவதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும்.

விளையாட்டு என்பது மனித வாழ்வின் இன்றியமையாத அங்கமாகும். அது உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாது ஒழுக்கம், தலைமைத்துவம், ஆளுமை வளர்ச்சி போன்ற முக்கிய பண்புகளையும் இளைஞர்களிடையே உருவாக்குகின்றது. இதனாலேயே கிராம மட்ட விளையாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கி வருகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மூன்று இடங்களில் கரப்பந்தாட்ட மைதானங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும் நோக்கில் அரசாங்கம் தேவையான நிதி ஒதுக்கீடுகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக போதைப்பொருள் உள்ளிட்ட தீய பழக்கங்களில் இருந்து இளைஞர்களை விலக்கி, ஆரோக்கியமான வாழ்க்கை முறையை நோக்கி வழிநடத்துவதில் விளையாட்டு மிக முக்கியமான பங்காற்றுகின்றது.

விளையாட்டு மைதானத்தை அமைப்பது மட்டும் போதுமானதல்ல. வீரர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தேவையான நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் நெடுந்தீவில் விளையாட்டு அரங்கு அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திற்கு விளையாட்டுத்துறை அமைச்சராக நான் விஜயம் செய்த போது, முக்கிய நகரமாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் உள்ளக விளையாட்டு அரங்கு இல்லாதிருப்பது ஒரு முக்கிய குறைபாடாகக் காணப்பட்டது. அதனை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ள உள்ளக விளையாட்டு அரங்கிற்காக ரூபா 160 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான நிதி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர், குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக சிலர் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.


மக்களுக்காகப் பணியாற்றுவதாகக் கூறும் சிலர், மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களையே தடுத்து வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் உள்ளக விளையாட்டு அரங்கு அமைந்தால் அதனைப் பயன்படுத்தப் போவது இங்குள்ள இளைஞர்களும் மாணவர்களுமே. எனவே இத்திட்டத்தை எதிர்ப்பவர்கள் அரசாங்கத்தையோ அமைச்சையோ அல்ல, யாழ்ப்பாண மாவட்ட இளம் தலைமுறையின் எதிர்காலத்தையே பாதிக்கின்றனர்.

கொழும்பை மையமாகக் கொண்ட நிர்வாக முறையை மாற்றி, அமைச்சர்கள் நேரடியாக கிராமங்களுக்கு வந்து மக்களைச் சந்தித்து அவர்களின் தேவைகளை அறிந்து தீர்வுகளை வழங்கும் மக்கள் மையப்படுத்தப்பட்ட புதிய அரசியல் கலாசாரத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

எமது அரசாங்கம் இருக்கும் வரை இன, மத வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு பிரச்சினைகள் உருவாக இடமளிக்க மாட்டோம். வடக்கு, கிழக்கு என்ற வேறுபாடுகளோ, சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற பிரிவுகளோ இன்றி அனைவரும் இலங்கையர்களாக ஒன்றிணைந்து வாழ வேண்டும். அதற்காக அனைவரும் இணைந்து செயற்படுவோம் எனத் தெரிவித்தார். (ந-7,33)




புருசோத்தமன் | கார்த்திக் | சர்மி










ததிஸ் | ரகு | வாகினி










நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மின்சாரக் கட்டணத்தில் மாற்றமில்லை

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

**2026 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் மின்சாரக் கட்டணத்தில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்பட மாட்டாது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

தேசிய அமைப்பு செயற்பாட்டு நிறுவனம் (சமர்ப்பித்த மின்சார விநியோகச் செலவு அறிக்கையை மீளாய்வு செய்த பின்னரே ஆணைக்குழு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.


அனைத்துக் கணக்கீடுகளின்படி, நடப்பு காலாண்டில் மின்சார விநியோகத்திற்கான செலவு 0.3 சதவீதம் மட்டுமே அதிகரித்துள்ளதால், கட்டணத் திருத்தம் அவசியமில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த இரண்டாவது காலாண்டில் நடைமுறையில் இருந்த மின்சாரக் கட்டண முறைமையே தொடர்ந்து அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நிலக்கரியின் தரம் தொடர்பான பிரச்சினைகளால் இந்த ஆண்டின் முதல் காலாண்டில் ஏற்பட்ட 3,366 மில்லியன் ரூபாய் மேலதிக செலவை, மின் உற்பத்திச் செலவில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுகர்வோருக்கு மேலதிக சுமையை ஏற்படுத்தாத வகையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (8)

# நாட்டிற்கு கடத்த முயன்ற 292 கிலோ கஞ்சா பறிமுதல்



(தனுஷ்கோடி)


தமிழகம்-இராமநாதபுரம் அருகே கடல் வழியாக இலங்கைக்குக் கடத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட 292 கிலோ கஞ்சாவுடன் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உச்சிப்புளி அருகேயுள்ள புதுமடம் பேருந்து நிறுத்தம் பகுதியில் கடற்கரை நோக்கிச் சென்ற சரக்கு வாகனம் ஒன்றை நிறுத்தி பொலிஸார் சோதனையிட்டனர்.

இதன் போது, காய்கறி மூடைகளுடன் மறைத்து வைக்கப்பட்டிருந்த 8 சாக்குகளில், தலா 2 கிலோ எடை கொண்ட 146 பொதிகளில் மொத்தம் 292 கிலோ கஞ்சா இருந்தது கண்டறியப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த பொதிகள் படகு மூலம் இலங்கைக்கு கடத்தத் திட்டமிட்டிருந்தமை பொலிஸ் விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது . (8)

# வெள்ளத்தில் மூழ்கிய மலையகம் போக்குவரத்து பாதிப்பு



(கொழும்பு)

ஹற்றன் மற்றும் கொட்டக்கலை பகுதியில் பெய்த அடை மழையால் அப் பகுதியில் போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பாதசாரிகள் மற்றும் வர்த்தக நிலைய உரிமையாளர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியில் வசிப்பவர்கள் தற்காலிகமாகப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தொடர் கனமழையின் காரணமாக ஹற்றன், நுவரெலியா மற்றும் ஹற்றன், கொழும்பு போன்ற பிரதான சாலைகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழையால் மலையகப் பகுதிகளில் வெள்ளம் மற்றும் மண் சரிவு அபாயம் அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (8)


# INVITATION FOR BID 2026/03
# DEPARTMENT OF PROBATION AND CHILD CARE SERVICES, NORTHERN PROVINCE

1. The Chairman, Department Procurement Committee, on behalf of the **Commissioner, Department of Probation and Child Care Services, Northern Province, Meenadchi Amman Road, Pannai, Jaffna.** invites sealed bids from eligible and qualified bidders for the Construction work described in the **table below.** All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

   **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 if the estimated cost exceeds Rs.5 million,"**
4. Qualification's requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the **Bidding data & Contract Data** (Section 5) for **SBD 1** Documents for the works in Category I & II and in the Schedule (Section 5) for **SBD 03** Documents for the Works in Category III.
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **06.08.2026 To 27.08.2026 for the works in Category I and from 06.08.2026 To 20.08.2026 for the works in Category II & III** during **09:00 hrs and 15:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Commissioner, Department of Probation and Child Care Services, Northern Province, Meenadchi Amman Road, Pannai, Jaffna. (T.P:021-222-4782, Fax: 021-205-7103, email: pccsnp@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Department Procurement Committee, Department of Probation and Child Care Services, Northern Province, Meenadchi Amman Road, Pannai, Jaffna. on or before 10:30:00 AM as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Department of Probation and Child Care Services, Northern Province, Meenadchi Amman Road, Pannai, Jaffna.** commencing at **10:30:00 AM as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| Category I | Document Issuing/Purchasing Period | From 06/08/2026 To 27/08/2026 |
|---|---|---|
| | Pre-Bid Conference | At 10:30:00 AM on 13/08/2026 |
| | Closing and Opening of Bids | At 10:30:00 AM on 28/08/2026 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| PSDG/NP/B/PCC/MU/2026/01 | Construction of New Building for District Probation Office with Court Unit at Mullaitivu | 59.08 | 180 | C5, C4 and C3 (Buildings) | 17,000.00 | 591,000.00 | 25/12/2026 | 27/11/2026 |

| Category II | Document Issuing/Purchasing Period | From 06/08/2026 To 20/08/2026 |
|---|---|---|
| | Pre-Bid Conference | At 10:30:00 AM on 13/08/2026 |
| | Closing and Opening of Bids | At 10:30:00 AM on 21/08/2026 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| PSDG/NP/B/PCC/JA/2026/01 | Construction of Boundary Wall (250Lm) at Certified School, Atchuvely | 22.41 | 90 | C6, C5 and C4 (Buildings) | 8,000.00 | 225,000.00 | 04/12/2026 | 06/11/2026 |

| Category III | Document Issuing/Purchasing Period | From 06/08/2026 To 20/08/2026 |
|---|---|---|
| | Pre-Bid Conference | At 10:30:00 AM on 13/08/2026 |
| | Closing and Opening of Bids | At 10:30:00 AM on 21/08/2026 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| MRC/NP/B/PCC/JA/2026/01 | Children Park Renovation at State Receiving Home, Kaithady | 1.46 | 75 | C9, C8 and C7 (Buildings) | 2,000.00 | 15,000.00 | 06/11/2026 | 09/10/2026 |
| MRC/NP/B/PCC/JA/2026/02 | Renovation Works at Head Office, Department of Probation & Child Care Sevices, NP | 3.87 | 60 | C9, C8 and C7 (Buildings) | 3,000.00 | 39,000.00 | 06/11/2026 | 09/10/2026 |
| MRC/NP/B/PCC/JA/2026/03 | Refurbishment of Library and other building at Certified School, Atchuvely | 3.80 | 90 | C9, C8 and C7 (Buildings) | 3,000.00 | 38,000.00 | 06/11/2026 | 09/10/2026 |

**Chairman,**
**Department Procurement Committee,**
**Department of Probation and Child Care Services, Northern Province,**
**Meenadchi Amman Road, Pannai, Jaffna.**

(C-6163)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் வெப்பநிலை போதியளவு நீர் அருந்துங்கள்

## வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்து

**(கொழும்பு)**

**நாட்டின் கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்கள் உட்பட கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெப்பநிலை தொடர்பான விசேட எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**



அதற்கமைய, மனித உடலால் உணரப்படும் வெப்பத்தின் அளவானது, மேற்குறித்த பகுதிகளின் சில இடங்களில் "எச்சரிக்கை மட்டத்தை" எட்டக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

காற்றின் ஈரப்பதம் மற்றும் அதிகபட்ச வெப்பநிலையைக் கணக்கிட்டே இந்த வெப்ப சுட்டெண் கணிக்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீண்ட நேரம் வெயிலில் இருப்பதோ அல்லது வெளியில் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடுவதோ உடற்சோர்வை ஏற்படுத்தும் என்றும், தொடர்ச்சியாக வெளியில் பணியாற்றுவது தசைப் பிடிப்புக்கு வழிவகுக்கும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் போதுமான அளவு தண்ணீர் குடித்து உடலை நீரேற்றத்துடன் வைத்துக்கொள்ளுமாறும், கடினமான வெளிப்புற நடவடிக்கைகளைக் குறைத்துக் கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது. (8)

# முன்பள்ளி சிறார்களுக்கான "கலாசார உடையணிதல்" போட்டி

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக் கோவில் ஏற்பாடு செய்துள்ள சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் கோட்ட முன்பள்ளி சிறார்களுக்கான ஆன்மீக விளையாட்டுப் போட்டியின் நான்காம் நாள் நிகழ்வாக "கலாசார உடையணிதல்" போட்டி இன்று செவ்வாய்க் கிழமை மாலை 5 மணிக்கு சண்டிலிப்பாய் ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக் கோவில் வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

பிரம்மஸ்ரீ . சபா. உமாபதி சர்மா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சங்கானை இலங்கை வங்கி முகாமையாளர் பா. சேதுசங்கர், கௌரவ விருந்தினராக எஸ் அன்னலிங்கம்(கலட்டி ஐயனார் ஆலயம்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாதஸ்வர கலாமணி P.V பிரதீத் கலைஞராக முன்னிலை வகிக்கும் இந் நிகழ்வில் குரு ஆசியுரை- ஓய்வு நிலை அதிபர் "சிவாகம, வைதீக கலா வித்தகர் " சிவஸ்ரீ. பாஸ்கர ரவிக் குருக்கள், பிரம்மஸ்ரீ.வ. ஸ்ரீகாந்த சர்மா, உபதேச திருக் கோவில் உரை- கற்பகப்பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா பு. ஆறுமுகதாசன், வரவேற்புரை- சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் எஸ். சுகந்தன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந் நிகழ்வுக்கு வருகை தரும் அனைவரையும் சைவத் தமிழர் பாரம்பரிய உடையணிதலை பின்பற்றி கலந்து கொள்ளுமாறு ஆலயகுரு முதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (8)

# கடற்படையினரின் தேடுதல் வேட்டையில் பெருந்தொகையான பீடி இலைகள் மீட்பு



(கொழும்பு)

இலங்கை கடற்படை மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட பெருந்தொகையான பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

நீர்கொழும்பு, பிரவுன்ஸ் கடற்கரைப் பகுதியில் இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, அந்த பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் காணப்பட்ட 5 மூடைகள் சோதனையிடப்பட்டன.

அந்த மூடைகளிலிருந்து சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட 234 கிலோகிராமுக்கும் அதிகமான பீடி இலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையின் மூலம் கைப்பற்றப்பட்ட பீடி இலைத் தொகுதி, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நீர்கொழும்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (8)

# பிரதியமைச்சரின் பெயரால் மோசடி விழிப்புடன் இருக்குமாறு எச்சரிக்கை



(கொழும்பு)


கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்கவின் பெயரைப் பயன்படுத்தி, தொலைபேசி அழைப்புகள் மூலம் பணம் பறிக்கும் மோசடிக் கும்பல் ஒன்று செயற்பட்டு வருவதாக அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தின் ஊடாக இதனைத் தெரிவித்துள்ள பிரதி அமைச்சர்,

இவ்வாறான போலியான அழைப்புகளை நம்பி பொது மக்கள் ஏமாற வேண்டாம்.

குறிப்பாக, எனது பெயரைப் பயன்படுத்தி பணம் கோருபவர்களிடம் எவ்வித பணத்தையும் வழங்கவோ, அல்லது தனிப்பட்ட தகவல்கள் மற்றும் உத்தியோக பூர்வ ஆவணங்களைப் பகிர்ந்து கொள்ளவோ வேண்டாம்.

இத்தகைய சந்தேகத்திற்கிடமான அழைப்புகள் அல்லது குறுஞ்செய்திகள் வந்தால், உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது உரிய அதிகாரிகளிடமோ முறைப்பாடு செய்யுமாறும் இவ்வாறான திட்டமிட்ட மோசடிகளில் சிக்காமல் இருக்க மக்கள் மிகுந்த விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (8)



மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் கைலாய வாகன உற்சவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

# மலையகத்தில் மண்சரிவு!

(கொழும்பு)

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழை காரணமாக, ஹற்றன்- கொழும்பு தியகல பகுதியின் பிரதான வீதியின் பல இடங்களில் மண்மேடுகள் சரிந்து விழுந்துள்ளதால் அந்த வீதியூடான போக்குவரத்து முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீதியில் மண்மேடுகளும் பாறைகளும் சரிந்து விழுந்துள்ளமையால் ஹற்றனில் இருந்து கினிகத்தேன, நாவலப்பிட்டி, கண்டி மற்றும் கொழும்பு நோக்கிப் பயணிக்கும் வாகனங்களுக்கும், அதே திசைகளில் இருந்து ஹற்றன் நோக்கி வரும் வாகனங்களுக்கும் போக்குவரத்து தடைகள் ஏற்பட்டுள்ளன. (8)

# சிறுகதைப் போட்டிக்கு ஆக்கங்கள் கோரல்

பிரான்ஸ் தமிழர் கல்வி நிலையத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கைத்தீவிற்கு உட்பட்டதாக நடத்தப்படும் தமிழ்ச் சிறுகதைப் போட்டிக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்களை எதிர்வரும் செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் ftec40@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது CENTRE TEMOUL D'ENSEIGNEMENTS EN FRANCE 21 ter rue Voltaire, T50II Paris, FRANCE எனும் முகவரிக்கோ அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக தகவலுக்கு 003 628226989 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (8)

# இலவச கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு, வேலாயுதன் தேவசேனாதிபதி (LLB) அருள் கல்வி வட்டம் நடத்தும் கா.பொ.த (சா.த) மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு நாளை முதல் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடைபெறவுள்ளது. அந்த வகையில் முதலாவது கருத்தரங்கு நாளைய தினம் சாவகச்சேரி கலாசார மண்டபம், சாவகச்சேரி சிவன் கோவிலடி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 6 ஆம் திகதி வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி அரங்கத்திலும் 7 ஆம் திகதி ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும் 8 ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலும் (மாணவிகளுக்கு மட்டும்) 9 ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலும் (இரு பாலாருக்கும்) 10 ஆம் திகதி மன்னார் நகர சபை மண்டபத்திலும் (மன்னார் மற்றும் மடு மாணவர்களுக்கு) 11 ஆம் திகதி கிளிநொச்சி கூட்டுறவுச் சங்க மண்டபத்திலும் (கிளிநொச்சி தெற்கு வலய மாணவர்களுக்கு) 12 ஆம் திகதி கிளிநொச்சி கூட்டுறவுச் சங்க மண்டபத்திலும் (கிளிநொச்சி, வடக்கு வலயம் மற்றும் துணுக்காய் வலய மாணவர்களுக்கு) 13 ஆம் திகதி குயின்ஸ் பேலஸ், மாஞ்சோலை, தண்ணீரூற்றிலும் 14 ஆம் திகதி வவுனியா நகர சபை மண்டபத்திலும் நடைபெறவுள்ளது. மாணவர்கள் பாடசாலைச் சீருடையுடனும் பொறுப்பாசிரியர்களுடனும் வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தையிட்டி கரப்பந்தாட்ட மைதானம் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தையிட்டி ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்ட மைதான நவீனமயமாக்கல் பணிகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெற்றது.

இந் நிகழ்வில் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சுனில் குமார கமகே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு, கரப்பந்தாட்ட மைதான நவீனமயமாக்கல் பணிகளை அடிக்கல் நாட்டி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.



இத் திட்டத்திற்காக அமைச்சினால் ரூபா. 8.9 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

## கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

பதிவு இல- J/1595-11.03.1972

**விற்பனை முகவரை தெரிவு செய்தல் (உள்நாடு-வெளிநாடு)**

கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் (தனிவளை) போத்தல் கள் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட பனங்கள்ளினை அனுமதி பெற்ற விற்பனை நிலையங்களுக்கும் வெளிமாவட்டங்கள் வெளிநாடுகளுக்கும் கொண்டு சென்று விற்பனை செய்வதற்கான முகவரை தெரிவு செய்யவுள்ளோம்.

இத்தெரிவுகள் யாவும் நெறியாளர் குழுவில் ஆராயப்பட்டு தெரிவு செய்யப்படும் விண்ணப்பங்களை வழங்க விரும்புவோர் **15.08.2026** ஆம் திகதிக்கு முன்னதாக **"தலைவர், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம், கொடிகாமம்"** என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் விண்ணப்பங்கள் வழ்ங்க முடியும். விண்ணப்பங்கள் யாவும் சுயமாக தயாரித்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரருடன் நிபந்தனைகளை உள்ளடக்கி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு (வங்கி உத்தரவாதம்) பெறப்பட்டு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்.

**மேலதிக தகவல்களுக்கு**
**தொ.இல-021 205 0215**

(C-6162)

**தலைவர்**
**க.செல்வேஸ்வரன்**

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம்

**ஆதன இலக்கம் 41/6, பிரதான துணவி வீதி, வட்டாரம் 04**

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 04. பிரதான துணவி வீதி. ஆதன் இலக்கம் 41/6 என்ற ஆதனத்திற்கான ஆதன வரிப்பதிவேட்டில் தம்பிப்பிள்ளை இராசரத்தினம் என்ற பெயர் காணப்படுகின்றது. குறித்த ஆதனத்திற்கு பெயர்மாற்றத்திற்காக மோகனராஜா பெண் இறஞ்சுகி என்பவர் விண்ணப்பித்துள்ளார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனமும் மிகுதியாதனங்களும் வேறொரு ஆதனத்திற்கும் ஆரம்பத்தில் பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முன்பாக 2005.02.07 திகதியில் 8322 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல் உறுதியின் பிரகாரம் சுப்பிரமணியம் நடராசாவும் பெண் ஜெயலக்சுமியும் என்பவர்கள் தங்களில் ஜெயலக்சுமியின் பெற்றோர்கள் தம்பிப்பிள்ளை இரத்தினசபாபதியும் பெண் நேசம்மாவும் ஆரம்பத்தில் குறித்த ஆதனத்துக்குச் சொந்தக்காராகவிருந்து ஜெயலக்சுமிக்கு 1966 ஆம் ஆண்டில் குறித்த ஆதனத்தினை சீதனமாக வழங்கியிருந்ததாகவும் குறித்த உறுதியின் விபரங்கள் தமக்குத் தெரியாததன் காரணமாக குறித்த வெளிப்படுத்தல் உறுதியினை தமது நீண்ட கால ஆட்சிக்குட்பட்ட ஆதனம் என்பதனை உறுதிப்படுத்தி வெளிப்படுத்தியிருந்தனர். அதன் பின்னர் சுப்பிரமணியம் நடராசாவும் பெண் ஜெயலக்சுமியும் முழு ஆதனத்தில் நிலப்பரப்பு 7 குளி 4 விஸ்தீரணமுடைய ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு. க.கேசவன் முன்பாக 09.03.2005 திகதியில் 8356 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதியால் அரசலிங்கம் பெண் சுமதிக்கு அறுதியாக விற்றிருந்தனர். அரசலிங்கம் பெண் சுமதி தனது கணவர் இராசையா அரசலிங்கத்துடன் இணைந்து அதன் பின்னர் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முன்பாக 2022.07.08 திகதியில் 2608 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதியால் நிலப்பரப்பு 4 குளி 02.23 விஸ்தீரணமுடைய ஆதனத்தினை மோகனராஜா பெண் இறஞ்சுகிக்கு அறுதியாக விற்றிருந்தனர். இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் M.C.M.Raafik அவர்களால் 2022.06.25 திகதியில் அளக்கப்பட்டு 2022.07.10 திகதியில் 2022/36 ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்ட ஆதனமாகும்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
ஆதனப்பெயர் : பிராமணன் பங்கு
இறை: வட்டுக்கோட்டை இறை
விஸ்தீரணம் : நிலப்பரப்பு 04 குளி 02.23

எல்லைகள் கிழக்கு: அருணாசலம் சசிகரனினாதனம். வடக்கு: பசுபதி தனபாலசிங்கத்தினாதனம். மேற்கு: பாதை தெற்கு: இராசேந்திரம் பிரதீபனும் பெண் துரைராசா சங்கரினதும் ஆதனம்

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக யாராவது ஆட்சேபனை இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மோகனராஜா பெண் இறஞ்சுகி என்பவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எந்த பொறுப்பிற்கும் வலிமேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(8304)

**தவிசாளர்/செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை**

## சுதுமலை? 

சுழிபுரம்? 

## சுவில் தீபஜோதி சனசமூக நிலையத்தின்

52 ஆண்டு நிறைவையொட்டி

52 வது ஆண்டு நிறைவையொட்டி

நடாத்தப்படும் விளையாட்டு போட்டி

**12.08.2026**
(ஆடி அமாவாசை தினம்அன்று)

இடம் : கிராமக்கோட்டுச்சந்தி, பருத்தித்துறை

நேரம் : காலை 6.00 மணி

நாள் : புதன்கிழமை



வெளிக்கழகங்களுக்கிடையேயான
**மாபெரும் சைக்கிள்**
ஓட்டப்போட்டி

மற்றும்
**மரதன்**
ஓட்டப்போட்டிகள்



குறிப்பு
பதிவுக் கட்டணம் இலவசம்

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் வெளிக்கழகங்கள் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 10.08.2026 (திங்கட்கிழமை) ற்கு முன்பாக நேரடியாகவோ அல்லது கீழ்வரும் தொலைபேசி இலக்கம் ஊடாகவோவிண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

(C-6161)

076 924 2201 | 077 924 2332 | 075 815 9857 | 077 391 4053

## சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



திருமதி.**கலைவாணி கெங்காதரன்**
(B.A,SLTS-I) பிரதி அதிபர்

**சேவை விபரம்**

- யா/குட்டியபுலம் அ.த.க.பாடசாலை 15.07.1998 - 15.06.2002
- யா/இணுவில் மத்திய கல்லூரி 16.06.2002 - 15.01.2007
- யா/வீமன்காமம் மகா வித்தியாலயம் 16.01.2007 - 15.06.2010
- யா/ உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் 16.06.2010 - 31.12.2020
- யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம் 01.01.2021 - 30.04.2021
- யா/ உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் 01.05.2021 - 04.08.2026

திருமதி.கலைவாணி கெங்காதரன் அவர்கள் இருபத்து எட்டு வருடங்களுக்கு மேல் ஆசிரியர் பணியாற்றி எமது பாடசாலையில் பல வருடங்கள் தமது ஆசிரியப் பணியை சிறப்பாக ஆற்றி பிரதி அதிபராக இருந்து நிர்வாகக் கடமைகளில் பணியாற்றியும் பாடசாலை முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டமைக்கு பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கும் இவ்வேளை அவருடைய ஓய்வு காலம் நலமும் வளமும் பெற்று சிறப்போடு இருக்க வாழ்த்துகிறோம்.

(8151)

வாழ்த்துவோர்:- அதிபர், ஆசிரியர், கல்விசாரா ஊழியர்கள், ஆசிரிய நலன்புரிக் கழகம், யா/உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாரதம்

## படகில் பற்றிய தீ ஏழு பேர் பலி

### இந்தோனேசியாவில் துயரம்



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் மதுரா தீவுக்கு அருகே கடலில் பயணிகள் படகு தீப்பிடித்து விபத்துக்குள்ளானதில் 5 பேர் உயிரிழந்ததாகவும், 41 பேரைக் காணவில்லை என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

இந்தோனேசியாவின் சுரபயாவில் இருந்து நேற்றுக் காலை மக்காசரை நோக்கி சுமார் 250இற்கும் மேற்பட்ட பயணிகள் மற்றும் பணியாளர்களை ஏற்றிக் கொண்டு "முதியாரா செந்தோசா 2" என்ற கப்பல் சென்றுள்ளது.

கப்பல் புறப்பட்ட சில மணிநேரங்களிலேயே மதுரா தீவுக்கு அருகே தீவிபத்து ஏற்பட்டுள்ளது. உடனே இது குறித்து கப்பல் கேப்டன் தகவல் அளிக்க பலரும் பாதுகாப்பு ஜாக்கெட்டுகளை அணிந்து கொண்டு கடலில் குதித்துள்ளனர். கடலில் குதித்தவர்களை தேடும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

கப்பலில் இருந்தவர்களை மாற்றுக் கப்பல்கள் மூலம் கரைக்கு அழைத்துச் சென்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர். கடலில் மாயமானவர்களை மீட்க அனைத்து பாதுகாப்பு முகமைகளும் ஒருங்கிணைந்து செயற்படுவதாகவும் இந்தோனேசிய போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

படகில் தீ விபத்து ஏற்பட்டதற்கான துல்லியமான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

17,000 இற்கும் மேற்பட்ட தீவுகளைக் கொண்ட இந்தோனேசியாவில், படகுப் போக்குவரத்து மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்வது குறிப்பிடத்தக்கது. (க-8)

## இரண்டு ஹெலிகப்டர்கள் நடுவானில் மோதி விபத்து

### காட்டுத் தீயைக் கட்டுப்படுத்தும் போது பயங்கரம்



(எதென்ஸ்)

எதென்ஸுக்கு மேற்கே உள்ள போர்ட்டோ ஜெர்மெனோ பகுதியில் வேகமாகப் பரவி வரும் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்தும் பணி யில் ஈடுபட்டிருந்த இரண்டு தீயணைப்பு ஹெலிகப்டர்கள் நடுவானில் மோதி விபத்துக்குள்ளாகின.

கிரீஸ் தீயணைப்புத் துறை வெளியிட்டுள்ள தகவலின்படி, மோதிக்கொண்ட ஒவ்வொரு ஹெலிகப்டரிலும் தலா இரண்டு விமானப் படை வீரர்கள் என மொத்தம் 4 பேர் இருந்தனர் எனவும் விபத்து நடந்த இடத்தில் தேடுதல் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இருப்பினும், விமானிகளின் நிலை குறித்த அதிகாரப்பூர்வ தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை எனத் தெரிவித்தனர்.

விபத்தில் ஒரு ஹெலிகப்டர் தரையில் விழுந்து நொறுங்கும் வீடியோ காட்சிகளும் வெளியாகியுள்ளன.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் காட்டுத்தீ பரவலாக தீவிரமடைந்துள்ளது.

பிரான்ஸ் நாட்டில் காட்டுத் தீயானது தலை நகர் பாரிஸை விட 4 மடங்கு பெரிய பரப்பளவை எரித்து சாம்பலாக்கியுள் ளது.

சுமார் 2 இலட்சத்து 24 ஆயிரம் மக்கள் தங்கள் வீடுகளை விட்டுப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தீயை அணைக்க ஆயிரக்கணக்கான தீயணைப்பு வீரர்கள், இராணுவம், ஹெலிகப்டர்கள் மற்றும் பிரத்தியேக விமானங்கள் களமிறக்கப்பட்டுள்ளன.

வீசும் கடுமையான காற்று, வறண்ட நிலப்பரப்பு மற்றும் காற்றில் குறைந்த ஈரப்பதம் ஆகியவை தீயை விரைவாகப் பரவச் செய்வதால், தணிக்கும் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது எனவும் தொடர்ந்து தீயை கட்டுக்குள் கொண்டு வர அரசாங்கம் பெரும் முயற்சியில் ஈடுபட் டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-8)

## ஹார்முஸ் நீ... மாற்று...


### ஈரான் - ஓமான் பேச்...

**(டெஹ்ரான்) ..........................**

**உலகப் பொருளாதாரத்தின் முட்டுக்கட்... டையாகத் திகழும் ஹார்முஸ் நீரிணைக்கு... இணையான மாற்று வழியை ஏற்படுத்தும்... முயற்சி வெற்றியடைந்துள்ளதாக ஈரான்... தெரிவித்துள்ளது.**



## ஐபோனில் சிக்கிய உலக உருண்டை



சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து பூமி மற்றும் பசிபிக் பெருங்கடலின் பிரம்மாண்டமான தோற்றத்தை நாசா விண்வெளி வீரர் அனில் மேனன் நிழற்படமாகப் பதிவு செய்து சமூக வலைத்தளத்தில் பகிர்ந்துள்ளார்.

இந்த புகைப்படம் தொழில்முறை (Professional) கேமரா மூலம் அல்லாமல், சாதாரண iPhone கைப்பேசியைப் பயன்படுத்தியே எடுக்கப்பட்டதாக அனில் மேனன் தெரிவித்துள்ளார். விண்வெளியில் இருந்து பூமியின் வளைவு மற்றும் பசிபிக் பெருங்கடலின் சுழல் வடிவக் காட்சி தெளிவாகப் பதிவாகியுள்ள இந்த நிழற்படம், அதன் தரம் மற்றும் அழகிய தோற்றம் காரணமாக சமூக வலைத்தளங்களில் பரவலாக பகிரப்பட்டு வைரலாகி வருகிறது.

இந்த புகைப்படம், நவீன ஸ்மார்ட்போன் தொழில்நுட்பத்தின் திறனையும், விண்வெளியில் இருந்து பூமியின் இயற்கை அழகையும் ஒரே நேரத்தில் வெளிப்படுத்துவதாக பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர். (க-8)

## அமை... பாகி...

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின்
பக்துன்வா மாகா...
உள்ள ஸ்வாட் மா...
கபல் சவுக் பகுதியி...
ரவாதத்திற்கு எதிரா...
ஆமன் ஜிர்கா என்...
ப்பின் தலைமை...
களின் அமைதிப்...
நேற்று நடைபெற்ற...
பேரணியில் ...
உரையாற்றிக் கொ...
வேளையில், அருகி...
கபல் காவல் நிலை...
நுழைவாயில்
நுழைய முயன்...
சந்தேகத்தின் பேரி...
துறையினர் தடுத்...
சோதனை செய்ய...
னர்.
அப்போது, அ...
உடலில் பொருத்த...
குண்டுகளை ...
செய்துள்ளார்.
இக்குண்டு வெ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீரிணைக்கு இணையான
# வுப்பாதை தயார்

## பச்சு இறுதிக்கட்டத்தில்

......
நிக்கட்
ணைக்கு
த்தும்
ஈரான்



ஹார்முஸ் நீரிணை கடல் வழிப்பாதை தொடர்பாக ஈரான் மற்றும் ஓமான் இடையே நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளதாக ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி தெரிவித்துள்ளார்.

உலகின் மிக முக்கிய எண்ணெய் போக்குவரத்துப் பாதையான ஹார்முஸ் நீரிணைக்கு அமைவாகப் புதிய கடல் வழிப்பாதை ஒன்றை உருவாக்குவது தொடர்பாக, ஈரானுக்கும் ஓமானுக்கும் இடையே இந்த பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் இரண்டு தரப்பும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு புதிய பாதையை அமைப்பதில் உடன்பாட்டை ஏற்படுத்தி வருவதாக ஈரான் அறிவித்துள்ளது.

இது தற்போதுள்ள வடக்கு அல்லது தெற்குப் பாதையாக இல்லாமல், இரு நாடுகளின் இறையாண்மையையும், ஈரானின் தேசிய பாதுகாப்பு மற்றும் நலன்களையும் பாதுகாக்கும் வகையில் அமையும் என்றும் ஈரானிய அமைச்சர் குறிப்பி



ட்டுள்ளார்.

உலகளவில் நுகரப்படும் மசகு எண்ணெயில் சுமார் 20 சதவீதம் ஹார்முஸ் நீரிணை வழியே கொண்டு செல்லப்படும் நிலையில், இந்தப் பேச்சுவார்த்தை உலகளாவிய எரிபொருள் சந்தையில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. (க-8)

## வீழ்ச்சி அடையும் மசகு எண்ணெய் விலை




(வோஷிங்டன்)


ஈரானுடன் புதிய பேச்சு வார்த்தைகள் தொடங்கும் என அமெரிக்க ஜனாதிபதி அறிவித்ததைத் தொடர்ந்து, சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலைகள் சுமார் 5% வரை சரிவைச் சந்தித்துள்ளது.

இதற்கமைய, ப்ரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 83.77 அமெரிக்க டொலராகவும், டபிள்யூ.டி.ஐ ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 80.37 அமெரிக்க டொலராகவும் விழ்ச்சியடைந்துள்ளது. (க-8)

## மைதி ஊர்வலத்தில் இரத்த ஆறு; பாகிஸ்தானில் 14 பேர் பலி

மாபாத்)
தானின் கைபர்
ா மாகாணத்தில்
வாட் மாவட்டத்தில்
பகுதியில் பயங்க
கு எதிராக ஸ்வாட்
ர்கா என்ற அமை
லைமையில் மக்
மைதிப் பேரணி
டைபெற்றது.
ரியில் பேச்சாளர்
றிக் கொண்டிருந்த
ல், அருகில் உள்ள
ல் நிலையத்தின்
யில் வழியே
முயன்ற நபரை
ின் பேரில் காவல்
ர் தடுத்து நிறுத்திச்
செய்ய முயன்ற

ாது, அந்த நபர்
பொருத்தப்பட்டிருந்த
ளை வெடிக்கச்
ர்.
ண்டு வெடிப்பில் 4



பேர் பலியாகியுள்ளதுடன் 20 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அமைதியை வலியுறுத்தி திரண்ட மக்கள் மீது நடத்தப்பட்ட இந்த கொடூர தாக்குதல் பாகிஸ்தானில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

2021 இல் ஆப்கானிஸ்தானில் தாலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றியதில் இருந்து, TTP என அழைக்கப்படும் தெஹ்ரிக் இ பாகிஸ்தான் அமைப்பு கைபர் பக்துன் வாவில் வலுவடைந்துள்ளது.

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதிகளில் சமீபகாலமாக பயங்கர வாதத் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

TTP பயங்கரவாதிகள் ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதிகளில் இருந்துகொண்டு அங்கிருந்து திட்டம் தீட்டி கைபர் பக்துன் வாவிற்குள் ஊடுருவி தாக்குதல் நடத்துவதாக பாகிஸ்தான் அரசு குற்றம் சாட்டுகிறது. (க-8)

## 'பறக்கும் தட்டைப் பார்த்தேன்' விமானியின் அதிர்ச்சிப் பகிர்வு


(லண்டன்)

லண்டன் கேட்விக் விமான நிலையத்திற்கு அருகில் விமானம் தரையிறங்க தயாராகிக் கொண்டிருந்த போது, மர்மமான தட்டு வடிவ பொருள் ஒன்றை விமானி கண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

விமானம் கீழ் இறங்கி, ஓடுபாதையை நோக்கி இடது புறமாகத் திரும்பிக் கொண் டிருந்தபோது, "பறக்கும் தட்டு அல்லது ஒரு தனித்துவமான ட்ரோன் போன்ற பொருள் ஒன்று விமானத்தின் வலது இறக்கைக்கு மிக அருகில் அபாயகரமாக கடந்து செல்வதை விமானி கவனித்துள்ளார்.

அந்த மர்மப் பொருள், விமானத்தில் இருந்து சுமார் 100 முதல் 300 அடி தொலைவில், அதே உயரத்திலும் எதிர் திசையிலும் பயணித்துக் கொண்டிருந்தது.

விமானி அந்த விண்கலத்தை அதன் வெளி விளிம்பில் அடர் நிற



குறியீடுகளைக் கொண்ட ஒரு தனித்துவமான தட்டு என்று விவரித்தார்.

அந்தப் பொருள், விளிம்பில் அடர் நிறக் கோடுகளுடன் கூடிய ஒரு தட்டு போல தெரிந்தது.

அது ஒரு ட்ரோனாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது, ஆனால் உறுதியாக தெரியவில்லை என அச் செய்தியில் விபரிக்கப்பட்டுள்ளது.

வேற்றுக்கிரக வாசிகள் மற்றும் பறக்கும் தட்டு போன்ற விடயங்கள் மக் கள் மத்தியில் பேசு பொருளாக இருக்கும் நிலையில் இச் செய்தி பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. (க- 8)

Digitized by Noolaham Foundation. noolaham.org | noolaham.media

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மற்றும் காந்தி சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத் தெரிவும் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத்தின் தலைவரும் வவுனியா பல் கலைக்கழக வேந்தருமான பேராசிரியர் சு. மோகனதாஸ் தலைமையில் யாழ்ப் பாணம் கண்டி வீதி அரியாலையிலுள்ள யாழ். மாவட்ட சர்வோதய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் அனைத்து உறுப் பினர்களையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு பொதுச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இக்கூட்டத்தில் மதுரையைச் சேர்ந்த பேராசிரியர் க. பழனித்துரை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விசேட உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)



தென்மராட்சி- சாவகச்சேரி நகர் வாரிவனம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மகோற்சவத்தின் நான்காம் திருவிழா தினமான கடந்த சனிக்கிழமை இரவு "மாலைக்கு வாதாடிய மைந்தன்" காத்தவராயன் சிந்துநடைக்கூத்து நிகழ்வு இடம்பெற்றது. (படம் : சுபேசன்)

# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1998- இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
7இல்செவ்
கி-பா-70
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc, Engineer
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: B/16592

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:ரேவதி
உயரம்:5'11"
தகைமை/தொழில்:BSc,MSc, Work in Embassy
எதிர்பார்ப்பு-பட்டதாரி
தொ.இ: B/14600

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்: சுவாதி
உயரம்:5'3"
தகைமை/தொழில்: BSc, MSc, PHD, Lecturer
எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: B/11225

பிறப்பு: 1992-இந்து
நட்சத்திரம்:பூசம்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: A/L, NVQ 3, Ambulance Driver
எதிர்பார்ப்பு: சைவபோசனம்,படித்த பெண்
தொ.இ: B/11486

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்:சித்திரை
கி.பா:14 1/2
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/7314

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
கி.பா:7 3/4
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:Dipolma in Management,Own Business
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ: G/13925

பிறப்பு:1986-இந்து
நட்சத்திரம்-பரணி
கி-பா-47
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Beautician
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ: G/16487

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்: பூரம்
கி-பா-11
உயரம்: 5'3"
தகைமை/தொழில் -BSc, MSc, QA
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16450

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

# இன்று ஒரு தகவல் 633



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## நகம்... கடிப்பதற்காக?

என்னுடைய நண்பர் ஒருத்தர்.அவர் விரலில் நகமே இருக்காது. என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? எல்லாத்தையும் அவரே கடித்துத் துப்பிவிடுவார். அப்படி ஒரு பழக்கம் .

சின்ன குழந்தைகள் நகம் கடிப்பது... விரல் சூப்புவது.. இதற்கு என்ன காரணம் தெரியுமா? குழந்தைகள் மனதில் ஏற்படக்கூடிய ஒருவித பாதுகாப்பின்மை (Insecurity) அல்லது தான் சரியாக கவனிக்கப்படுவதில்லை என்ற எண்ணத்தின் வெளிப்பாடு தான் இது என்கிறார்கள் வைத்தியர்கள். சில இடங்களில் இரண்டாவது குழந்தை பிறந்தவுடனே பெற்றவர்கள் கவனம் முதல் குழந்தையிடம்இருந்து கொஞ்சம் விலகி இரண்டாவது குழந்தையிடம் போகும். அந்த சமயத்தில் முதல் குழந்தைக்கு இந்தப் பழக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு,

சில குடும்பங்களில் கணவன் மனைவி இரண்டு பேருமே வேலைக்குப் போகிறவர்களாக இருப்பார்கள். குழந்தை நீண்ட நேரத்துக்குப் பெற்றோர்களைப் பிரிந்து இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கும் . குழந்தை ஒரு பாதுகாப்பின்மையை உணர ஆரம்பிக்கும் . இந்தப் பழக்கம் வந்து விடும் .

அதனால் ஒரு குழந்தைக்கு "தான் ஒதுக்கப்படுகின்றோம்" என்ற நினைப்பு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வளர்ந்த குழந்தைகளும் நகம் கடிக்கும். வயதானவர்களிடமும் இந்தப் பழக்கம் இருக்கும். இது ஒரு மனச்சிதைவின் வெளிப்பாடு என்கிறார்கள் மனநல நிபுணர்கள்.

அம்மா அப்பா திட்டினாலும் சரி அல்லது ஆசிரியர் திட்டினாலும் சரி இந்தப் பழக்கம் வந்து விடும்.

தாம் தவறு செய்துவிட்டோம் என்ற நினைப்பு வருகின்ற சமயம் நகம் கடிக்க ஆரம்பித்து விடுவார்கள். ஏதோ ஒன்றை அடைய வேண்டும் என்று நினைக்கின்றோம் . அதை அடைய முடியவில்லை.

இப்படி ஒரு ஏக்கம் வருகின்ற சமயத்தில் சில பேர் நகத்தைக் கடிக்க ஆரம்பித்து விடுவார்களாம். ஒரு பெரிய அதிகாரி தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கிறவர். அவர் டென்ஷன் ஆகி விட்டார் என்றால் உடனே அறைக் கதவை சாத்தி விடுவாராம் .

அப்படி சாத்தி விட்டு உள்ளே எதையாவது வெறித்து பார்த்துக் கொண்டு நகத்தைக் கடிக்க ஆரம்பித்து விடுவாராம்.

இந்தப் பழக்கம் உலகம் முழுவதும் உண்டு. நகம்.கடிக்கிறவர்களை அந்தப் பழக்கத்திலிருந்து மீட்பதற்கு என்ன வழி? என்று லண்டனில் உள்ள அழகியல் நிறுவன நிபுணர்கள் யோசித்திருக்கிறார்கள்.

சில ஆய்வுகள் எல்லாம் செய்து பார்த்திருக்கிறார்கள் அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? நகம் கடிக்கின்ற பழக்கம் உள்ளவர்களை எல்லாம் பார்த்தார்கள். அவர்களை மூன்று பிரிவாக பிரித்து விட்டார்கள் .

ஒரு பிரிவிடம் என்ன சொன்னார்கள் என்றால். "உங்களுக்கு நகத்தைக் கடிக்க வேண்டும் என்கின்ற நினைப்பு வருகின்ற போது எல்லாம் டயரி எழுத ஆரம்பித்து விடுங்கள்" என்றார்கள். இன்னொரு பிரிவிடம் "உங்களுக்கு அந்த நினைப்பு வருகின்ற போது எல்லாம் உங்கள் நகத்திற்கு வண்ணம் பூசி அழகுபடுத்த ஆரம்பித்து விடுங்கள்" என்று யோசனை சொன்னார்கள் மூன்றாவது குழுவினரிடம் , உங்களுக்கு நகத்தைக் கடிக்க வேண்டும் என்கின்ற எண்ணம் வருகின்ற போது எல்லாம் விரல்களை இறுக்கமா மூடி வைத்துக் கொண்டு வேறு விடயங்களில் கவனம் செலுத்துங்கள் என்று சொன்னார்கள் .

இப்படி மூன்று விதமாக முயற்சி செய்து பார்த்ததில். கடைசியாக என்ன கண்டு பிடித்தார்கள் தெரியுமா? மூன்றாவது குழு செய்ததில் நல்ல பலன் தெரிந்தது. அதாவது நகம் தெரியாத படி விரலை இறுக்கி மூடிக் கொண்டு இருக்க இவர்களிடம் நகம் கடிக்கின்ற பழக்கம் மெல்ல மெல்ல குறைந்து விட்டதாம் .

அதனால் நகம் கடிக்கின்ற பழக்கம் உள்ளவர்கள் இதை முயற்சி செய்து பார்க்கலாம்.

அவருக்குத் திடீர் என்று உடம்பில் அரிப்பு சொறிந்து கொள்ள முடியவில்லை அரிப்பும் நிற்கவில்லை ஒரு வாரம் தொடர்ந்து கஷ்டப்பட்டார். கடைசியாக ஒரு வைத்தியரிடம் ஓடினார்.

அவர் எல்லாத்தையும் விபரமாக கேட்டு விட்டு கடைசியாக கொஞ்சம் மாத்திரை கொடுத்து வேளைக்கு ஒன்று எனச் சாப்பிடச் சொன்னார்.

"இந்த மாத்திரை எதற்கு வைத்தியர் அரிப்பு நிற்பதற்காக?" என்றார். "இல்லை நகம் வளர்ப்பதற்கு" என்றார். வைத்தியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### உள்நாட்டு உற்பத்திகளை நேரடியாக வழங்க

# இரு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

### கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு தெரிவிப்பு

**(கொழும்பு) ---------------- நுகர்வோருக்குத் தரமான உள்நாட்டு உற்பத்திகளை நேரடியாக வழங்கும் நோக்கில், லங்கா சீனி நிறுவனம் மற்றும் பி.சி.சி. லங்கா நிறுவனம் ஆகியவற்றுடன் இரண்டு விசேட புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கையெழுத்திடப்பட்டுள்ளதாகக் கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.**

இப் புதிய திட்டத்தின் கீழ் லங்கா சீனி நிறுவனத்திடமிருந்து மாதமொன்றிற்கு 1,000 தொன் சிவப்பு சீனியும், பி.சி.சி. லங்கா நிறுவனத்திடமிருந்து பொதி செய்யப்பட்ட 20,000 லீற்றர் தேங்காயெண்ணெய் மற்றும் சோப் உள்ளிட்ட ஏனைய உற்பத்திகளும் கூட்டுறவு விநியோகச் சங்கிலிக்கு பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

இப்பொருட்கள் 75 நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் ஊடாகச் செயற்படும் 3,500 பிரதேச விற்பனை நிலையங்களைக் கொண்ட பரந்த விநியோக வலையமைப்பின் மூலம் மக்களுக்குச் சென்றடையவுள்ளன.

இடைத்தரகர்களை அகற்றி, சந்தை விலையைக் கட்டுப்படுத்துவதுடன் விலையைச் சமநிலைப்படுத்தும் காரணியாக இத்திட்டத்தை முன்னெடுக்க எதிர்பார்ப்பதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும், 2029 ஆம் ஆண்டளவில் இப் பிரதேச விற்பனை நிலையங்களின் எண்ணிக்கையை 3,500 இலிருந்து 10,000 ஆக அதிகரிப்பதை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருவதாகவும், உள்நாட்டு உற்பத்திகளுக்கு மேலதிகமாக இந்தியக் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்து தரமான பொருட்களை இறக்குமதி செய்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தை விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 250 | 400 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | -- | 180 | -- | 350 |
| பச்சைமிளகாய் | 1200 | 1100 | 1400 | 90ள0 | 1200 | 1000 | 1100 |
| தக்காளி | 420 | 350 | 400 | 450 | 350 | 300 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 180 | 200 | 250 | 130 |
| கோவா | 180 | 300 | 250 | 200 | 300 | -- | 250 |
| கரட் | 400 | 400 | 400 | 350 | 450 | 400 | 370 |
| பூசணி | 100 | 200 | 160 | 180 | 200 | -- | 110 |
| புடோல் | 150 | 250 | 200 | 150 | 200 | 160 | 130 |
| வாழைக்காய் | 120 | 140 | 150 | 120 | 160 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 250 | 350 | 300 | -- | 280 |
| பெரிய வெங்காயம் | 180 | 240 | 240 | -- | 200 | 180 | -- |
| பாகற்காய் | 600 | 400 | 400 | 400 | 400 | 400 | 350 |
| வெண்டக்காய் | 200 | 200 | 200 | 180 | 200 | 200 | 120 |
| கருணைக் கிழங்கு | 350 | 400 | 300 | 350 | 400 | - | 350 |
| பயற்றங்காய் | 100 | 120 | 250 | 150 | 150 | 120 | 130 |
| லீக்ஸ் | 250 | 300 | 400 | 300 | 300 | -- | 260 |
| பீற்றூட் | 350 | 400 | 500 | 350 | 400 | 350 | 350 |
| கறிமிளகாய் | 400 | 700 | 800 | 500 | 700 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 300 | 120 | 300 | 200 | 350 |
| போஞ்சி | 400 | 550 | 600 | 400 | 600 | 500 | 400 |
| தம்புள்ள-கத்தரி | 200 | 200 | 300 | -- | 300 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 150 | 60 | 100 | -- | 70 |
| தேசிக்காய் | 350 | 250 | 200 | 250 | 450 | 300 | 330 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 140 | 150 | 140 | 100-160 | -- | 110 |
| இராசவள்ளி | 300 | 450 | 300 | 350 | 300 | -- | 300 |
| வெங்காயப்பூ | 300 | 250 | 400 | -- | 320 | -- | -- |
| முள்ளங்கி | 120 | 160 | 200 | 180 | 200 | 200 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 150 | -- | 60 | -- | 50 |
| வல்லாரை | 80 | 70 | 100 | -- | 120 | -- | 50 |
| ஈரப்பலா | 150 | 200 | 100 | -- | 150 | -- | 75 |

# கட்டுப்பாட்டை இழந்த வாகனம் லொத்தர் கூட்டுடன் மோதி விபத்து

(கொழும்பு)

கல்முனை பாண்டிருப்பு தாழ வட்டுவான் சந்தி பிரதான வீதி பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றொருவர் பலத்த காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கிச் சென்று கொண்டிருந்த சிறிய ரக பட்டா வாகனம், தாழவட்டுவான் சந்தியை நெருங்கிய போது சாரதிக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாகக் கட்டுப்பாட்டை இழந்துள்ளது.

கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீதியோரத்தில் அமைந்திருந்த "அபிவிருத்தி லொத்தர்" விற்பனை நிலையத்திற்குள் அதிவேகமாக மோதித் தலைகீழாகப் புரண்டதில், விற்பனை நிலையத்தின் தூண்கள் பலத்த சேதமடைந்து கடை தரைமட்டமானது.

இவ்விபத்தில் படுகாயமடைந்த வாகனச் சாரதியும், லொத்தர் கடை உரிமையாளரும் உடனடியாக மீட்கப்பட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும், அங்கு சிகிச்சை பலனின்றி வாகனச் சாரதி உயிரிழந்துள்ளார். (8)



# இராசிபலன்

04.08.2026
ஆடி 19, செவ்வாய்க்கிழமை
சஷ்டி முன்னிரவு 7.52 மணிவரை

ரேவதி முன்னிரவு 8.34 மணி வரை
சுப நேரம் 10.34-12.04 மணி வரை
இராகு காலம் 3.04-4.34 மணி வரை
சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்
உத்தரம், அத்தம்.

வளவன்

**மேஷம்** — விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், தேவையற்ற மனக்குழப்பங்களை தவிர்ப்பது நல்லது.

**கடகம்** — ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் தீட்டி தொழில் ஆதாயம் காண முற்படுவீர்கள்.

**துலாம்** — நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**மகரம்** — தொழில் ரீதியாக ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் இணக்கத்தோடு நடந்து கொள்வார்கள், உற்சாகத்தோடு செயற்படும் நாள், உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறலாம்.

**ரிஷபம்** — தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் திருப்தி தரும் வகையில் அமையும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**சிம்மம்** — மனதில் இனம்புரியாத மனக் குழப்பங்கள் தோன்றி மறையும், தொழில் ரீதியாக சில குழப்பங்கள் தோன்றலாம், பயணங்களின் போது நிதானம் தேவை, உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்** — விருந்தினர்கள் சந்திப்புக்கள் இடம் பெறலாம், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பணவரவு திருப்தி தரும், முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவை.

**கும்பம்** — குடும்பத்தில் உறவினரின் செல்வாக்கு மேலோங்கும் நாள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, முயற்சிகள் கை கூடும்.

**மிதுனம்** — மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மன நிறைவு கூடும் நாள், உற்சாகமான நாள்.

**கன்னி** — கேளிக்கை கொண்டாட்டங்களில் நாட்டம் கூடும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** — கூட்டு முயற்சிகளில் வெற்றி தரும், சுப செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், தன்னம்பிக்கையுடன் செயற்படும் நாள்.

**மீனம்** — வழிபாடு ஆனந்தம் தரும், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், மற்றவர்கள் வாங்கிய பொருட்களைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள்.




noolaham.org | noolaham.media

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1104





இந்தச் செய்தி காரணமாக, இரண்டு தினங்களுக்கு முன் வெளியிலே அடித்த புயலைப் போலவே தஞ்சை நகர மாந்தரின் உள்ளத்தில் உத்வேகப் புயல் அடிக்கத் தொடங்கியது. தஞ்சை நகரம் இதுவரை கண்டறியாத அளவில் இளவர சருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என்று மக்கள் தீர்மானம் செய்தார்கள். கோட்டைக்கு வெளியிலேயிருந்த புற நகரத்தின் வீதிகளை அலங்கரிக்கத் தொடங்கினார்கள். கூட்டம் கூட்டமாகத் தெருக்களிலே நின்று பேசலானார்கள். மேளதாளங்கள், தாரை தப்பட்டைகள் முதலிய வாத்தியங்கள் சேகரிக் கப்பட்டன.

ஆடல் பாடல்களில் தேர்ந்தவர்கள் இந்த விசேஷ சந்தர்ப்பத்தில் ஆற்றல்களை யெல்லாம் காட்டிவிடுவது என்று எண்ணி ஆயத்தம் செய்யலானார்கள். மாந்தர்களும் இளஞ்சிறார்களும் தங்களை அலங்கரித்துக் கொள்ளும் விதங்களைப் பற்றிச் சிந்தித்தார்கள். மற்றும் பல அவசரக்காரர்கள் இளவரசரை வரவேற்பதில் தாங்கள் முந்திக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் தஞ்சையிலிருந்து நாலா திசைகளிலும் சென்ற சாலைகளில் கொஞ்சத் தூரம் முன்னதாகச் சென்று காத்திருக்கத் தொடங்கினார்கள். அப்படி முன்னதாகப் புறப்பட்டவர்களை வேறு சிலர் பார்த்துப் பரிகசித்தார்கள்.

புறநகரம் இந்தப் பாடு பட்டதென்றால், கோட்டைக்குள்ளேயும் ஏதோ முக்கியமான சம்பவங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன என்பதற்கு விரைவிலேயே அறிகுறிகள் தென்பட்டன. காலையில் வழக்கம்போல் கோட்டை வாசல் திறந்தது. கறிகாய், தயிர், மோர் விற்பவர்களும் அரண்மனைகளில் அலுவல்களுக்குச் செல்வோரும் வழக்கம்போல் கோட்டைக்குள் சென்று கொண்டிருந்தார்கள். புயல் மழையினால் ஏற்பட்ட சேதங்களைப் பற்றி முறையிட்டுக் கொள்ள விரும்பியவர்கள் இன்று ஒரு சிலர் தான் வந்தார்கள். அவர்களும் கோட்டைக்குள் சென்றார்கள். வழக்கம் போல வேளக்காரப் படையும் கோட்டைக்குள் பிரவேசித்தது.

பின்னர், கோட்டை வாசற் கதவுகள் எல்லாம் சடசட வென்று சாத்தப்பட்டன. பெரிய பெரிய இரும்புத்தாழ்களைக் கொண்டு கதவுகளை இறுக்கும் சத்தமும் பூட்டுக்களை மாட்டிப் பூட்டும் சத்தமும் கேட்கத் தொடங்கின. பிற்பாடு வந்தவர்கள் காவலர்களால் தடுத்து நிறுத்தப்பட்டார்கள். முற்பகல் நேரத்தில் இம்மாதிரிக் கோட்டைக் கதவுகளைச் சாத்தித் தாழிடும் காரணம் என்னவென்று ஜனங்கள் பேச ஆரம்பித்த சமயத்தில் இன்னொரு அதிசயம் நடந்தது. கோட்டையைச் சுற்றியிருந்த அகழியைக் கடப்பதற்கு ஏற்பட்ட பாலமும் தூக்கப்பட்டது. அதற்குப் பிறகு யாரும் கோட்டை வாசலை நெருங்குவதற்கே முடியாமல் போய் விட்டது.

கோட்டையின் பிரதான வாசலாகிய வடக்கு வாசலுக்குச் சமீபமாக இருந்தவர்கள் மேற்கு வாசலையும் தெற்கு வாசலையும் பற்றி விசாரித்தார்கள். அந்த வாசல்களும் வடக்கு வாசலைப் போலவே சாத்திப் பூட்டப்பட்டன என்றும், பாலங்கள் தூக்கிவிடப் பட்டன என்றும் அறிந்ததும் மிக்க வியப்படைந்தார்கள்.


(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

யோசப் பாலாவின்...

## தூறல் மழையாகுமா? புயலாகுமா?



ஆலமரத்தடியில் கூடியிருந்து குசலம் விசாரிக்கும் மூத்தவர்கள் கூட்டம் மாலையானதும் அந்த மரத்தடி அமர்க்களமாயிருக்கும். சுண்டல் காரரும், கடலைக்கார அன்னம்மா கிழவிக்கும் வருவாய்க்கு ஏற்ற இடமாக மாறும் சூழலில் சுந்தரலிங்கத்தார் சுருட்டோடு புகை மூட்டத்தில் இருக்க தர்மராசா தனது நாளாந்த செய்திகளை சரமாக அவிட்டுவிட்டார். என்ன சுந்தரம் என்ன இன்றைக்கு தூறலாய் இருக்கு மழையா போகுமோ, புயலாய் மாறுமோ என்ற சொல்லோடு மரத்தடியில் செல்வராசா வந்து குதித்தார்.

தூறல் மழையாகும். சற்றுச் சென்றால் புயலாகலாம் எல்லாம் சூடுபிடிப்பதைப் பொறுத்துத் தான். என இடையாக தர்மராசாவின் செய்திக்கு துணுக்கு போட்டார் ராசு வாத்தி.

நாடு போற போக்க பார்த்தால் நாம் இங்கே இருக்கிறதுக்கும் குத்தகை வரி கொடுக்க வேண்டும் போல எல்லோ கிடக்கு, என வரதர் தன் அரசியல் அலசலை அவிட்டுவிட்டார்.

அப்படி என்ன செய்தி இன்றைக்கு பார்த்தனீர் என்ற சுந்தரின் கேள்விக்கு, கடலுக்குள் இறங்க அனுமதி பெற வேண்டுமாமே வறுமையில் மட்டி, சிப்பி பொறுக்கிற உள்ளூர் சனத்துக்கு மிரட்டலா எல்லோ கிடக்கு. காட்டுக்குள் சுள்ளி பொறுக்கவும் அனுமதி வேண்டுமாம்.

கிணத்துக்குள் தண்ணி எடுக்கவும், காற்று நுகரவும், சூரிய வெளிச்சத்தில் உடுப்பு காயப் போடவும் இனி அனுமதி பெற வேண்டும் போல, இன்னும் என்ன சட்டம் எங்கள் நாட்டில் வந்திடுமோ? இப்படி என்றால் எங்க போறது நம்மட சனம்? செல்வராசா புயலாகக் கிளம்பினார்.

தம்பிகளா லாச்சியில் பணமில்லாட்டி நாலு வழியால் உழைக்கத்தானே வேண்டும். இதை வைத்து ஆர் ஆர் எல்லாம் தவளைகள் முதலைகளாகப் போகுதோ தெரியவில்லை என ராசு வாத்தி மேளம் தட்டினார்.

யார் யாரோ நின்று மட்டி பொறுக்க போன பெண்களிடம் இறங்காதேங்கோ நாங்கள் குத்தகைக்கு இந்த ஏரியாவ எடுத்திட்டம் என்று சொன்னது போல தான் ஆடு, மாடு மேய்க்கப் போன இடத்திலையும் கலைக்கிறாங்க. சுள்ளி பொறுக்கவும் காட்டுக்குள்ளே போக ஏலாமல் இருக்கு. இதால காலைக் கடனை முடிக்கவும் எல்லோ காட்டுக்குள் ஒதுங்க முடியவில்லை என்ற முத்தரின் முணுமுணுப்பு கருத்துக்கள் தூறல் மழையான நிலையாக போனது.

எதைச் சொன்னாலும் ஆமா போட நம் சனத்துக்கு யார் சொல்லிக் கொடுத்தினம். எல்லாம் தங்கள் தங்கள் வாசியளை பார்த்து தங்களுக்கு என்றால் முந்தியடிக்கிறது தான் எங்கட தலை எழுத்தா போச்சு என்றார் ராசு வாத்தி. இங்க இருந்து வெறும் வாயால வடை சுடாம மக்களின் கஷ்டத்தை போக்கிற வழிகளை பொறுப்பில் உள்ளவர்களிடம் முயற்சிக்கிற ஏதாவது செயலில் காட்டுவம் என்ற சுந்தரின் சொல்லுக்கு ஆமோதிக்கும் தலையாட்டல்கள் மேகம் இருண்டு மழையாய் குளிர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> சமுதாய ரீதியில் துணிந்து செயலாற்றும் சக்தி படைத்த வர்க்கம் தொழிலாளர் வர்க்கம் தான்.
> ~ கார்ல் மார்க்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உழவில் இல்லையென்றாலும் மறையிலாவது....

தமிழின் பெருமைக்கு மூல காரணம் அம் மொழி தன்வசம் கொண்டுள்ள சொற்களஞ்சியமாகும்.

ஆம், எங்கள் தமிழ்மொழி மிகப்பெரும் சொற்களஞ்சியத்தைக் கொண்டுள்ளது.

அதில் வேளாண் தொழிலுக்கென்றே தனியான சொற்பிரயோகங்கள் தமிழில் உண்டு.

உதாரணத்திற்கு வயலில் சூடடிக்கும் போது அங்கு பயன்படும் சுளகை குல்லம் என்றே அழைப்பார்கள்.

அது போல களம், களப்பாய், போர், பொலி என்ற சொற்பதங்கள் சூடடிக்கும் இடத்தின் பிரயோகத்திற்குரியவை.

இங்கு தான் விவசாயிகள் மத்தியில் பயன்பாட்டுடைச் சொற்பதங்களும் தமிழ்மொழியில் உண்டென்பது உணர்தற்குரியது.

அதில் ஒன்று தான் உழவில் இல்லையென்றாலும் மறையிலாவது.... என்ற சொற்பதமாகும்.

ஆம், உழவு என்பதை விவசாயிகள் ஒற்றை உழவு. மறுத்தல் உழவு என வகைப்படுத்துவர். இங்கு ஒற்றை உழவிற்குள் அகப்படாத புல் பூண்டுகள் மறுத்தல் உழவில் எப்படியும் அகப்பட்டுவிடும்.

ஆக, உழவில் தப்பினாலும் மறுத்தலுக்குத் தப்பமுடியாது என்பதையே உழவில் இல்லையென்றாலும் மறையிலாவது.... என்ற சொற்றொடர் வழக்கத்திற்குள்ளாயிற்று.

இங்கு அந்தச் சொற்றொடர் எதற்கானது என்ற கேள்வி நிச்சயம் உங்களிடம் எழவே செய்யும்.

ஆம், வன்னிப்பெருநிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்புத் தொடரில் ஆட்சியாளர்கள் எவரும் கவனம் கொள்வதாக இல்லை.

சிலவேளையில் வன்னிப்பெருநிலத்தில் போர்க்குற்றம் புரிந்தவர்கள் என்ற குற்றச்சாட்டில் அதனோடு சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டால், மத்திய மாகாணத்தில் ஏற்பட்டுள்ள பெருவெள்ளம் போல, தென்பகுதியில் பேரினவாதிகளும் பௌத்த பிக்குகளும் சேர்ந்து பெரும் ஆர்ப்பாட்டம் செய்திருப்பர்.

உண்மை. இப்போது கூட, செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுகளில் நானூறைத் தாண்டிய மனித என்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து என்புக் கூடுகள் வெளிவர, வெளிவர தம் உறவுகளைத் தேடி வருகின்ற நம் மக்கள் படுகின்ற ஏக்கமும் துயரமும் கொஞ்சமல்ல.

நிலைமை இதுவாக இருக்க, மனித நேயமும் ஈவிரக்கமும் இல்லாத விமல் வீரவன்ஸ என்ற மனித ஜென்மம்; சிங்கள மக்களின் வரிப்பணத்தில் செம்மணி மனிதப் புதைகுழியை அகழ வேண்டுமா? என்று கேள்வி எழுப்பியுள்ளது.

ஆக, செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வுக்கு அரசாங்கம் நிதி ஒதுக்கியதற்கான எதிர்ப்பாக இஃது அமைகிறதெனில், வன்னியில் நடந்த போர்க்குற்றத்திற்காக கைதுகள் நடந்தால் நிலைமை எப்படி இருக்கும்.

இங்குதான் உழவில் தப்பியவர்களை மறுத்தல் உழவில் இயற்கை தண்டிக்கிறது.

ஆம், ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகள், அதற்கு உதவி புரிந்தவர்கள், அதைத் திட்டமிட்டவர்கள் என அனைவரும் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கும் போது, அஃது உழவில் இல்லை என்றாலும் மறையில்... என்பதாகப் பொருள்படும். அதுவே இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

## வருகிறது சூறாவளி
### தீவிர மழைக்கு வாய்ப்பு

பசுபிக் பெருங்கடலில் ஜப்பானின் தெற்குப் பகுதியில் தற்போது உருவாகி வரும் சூறாவளி காரணமாக, நாளை மறுதினம் 6ஆம் திகதிக்குப் பின்னர் நாட்டில் மழையுடனான வானிலை அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அஜித் விஜேமான்னகே, சூறாவளி தாக்கத்தால் காற்றின் வேகமும் அதிகரிக்கக்கூடும் எனவும் குறிப்பாக மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள், கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் அதிகளவு மழை பதிவாகும் வாய்ப்புள்ளது என்றார். (ந-7)

## மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் நபரொருவர் உயிரிழப்பு

(நாவலப்பிட்டி)

சீரற்ற காலநிலை காரணமாக மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் நாவலப்பிட்டி, சோலன்கந்தைப் பகுதியில் 65 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

தற்போதைய சீரற்ற காலநிலை நிலவரம் குறித்து தெளிவுபடுத்துவதற்காக இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், நிலவும் சீரற்ற காலநிலையினால் கண்டி - நாவலப்பிட்டிப் பகுதியில் சிறிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய, நாவலப்பிட்டிப் பகுதியில் 38 குடும்பங்களைச் சேர்ந்த 138 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பிரதீப் கொடிப்பிலி மேலும் தெரிவித்தார். (ந-7)

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்
## கோட்டாபயவின் மனு நீதிமன்றால் ஒத்திவைப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் தம்மைக் கைது செய்வதற்கோ அல்லது தடுத்து வைப்பதற்கோ தடை விதிக்குமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாக்கல் செய்த எழுத்தாணை மனு மீதான உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் செப்ரெம்பர் 22 ஆம் திகதி வரை ஒத்தி வைத்துள்ளது.

குறித்த மனுவை மேலதிக விசாரணைக்காக ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பது தொடர்பில் செப்டம்பர் 22 ஆம் திகதி நீதிமன்றம் அறிவிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## ஹட்டனில் மண்சரிவு
### பெண்ணொருவர் மரணம்

(ஹட்டன்)

ஹட்டன் - பொல்பிட்டிய, மொரஹேனகம பகுதியிலுள்ள வீடொன்றின்மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் பெய்த கடும் மழையுடன் ஏற்பட்ட மண்சரிவே இந்த அனர்த்தத்திற்குக் காரணம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மண்சரிவு ஏற்பட்ட நேரத்தில் வீட்டினுள் மேலும் சிலர் இருந்திருக்கலாம் என்ற தகவலின் அடிப்படையில், தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும், அப்பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக மீட்புப் பணிகள் இடையூறுகளை எதிர்கொண்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ந-7)

## கண்டி, நுவரெலியா
## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

மத்திய மாகாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டப் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை தேவையேற்படின் மத்திய மாகாணப் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாணக் கல்விப் பணிப்பாளர் நயோமி ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ந-7)

## தரமற்ற தலைக்கவசங்களை முடக்க அதிரடி நடவடிக்கை

SLS தரச்சான்றிதழ் அற்ற மற்றும் தரமற்ற தலைக்கவசங்களைத் தயாரிப்பவர்கள் மற்றும் விற்பனை செய்பவர்களைக் கண்டறிவதற்கான விசேட சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை தரக்கட்டளைகள் நிறுவனம் மற்றும் நுகர்வோர் விவகார அதிகாரசபை ஆகியவற்றுடன் இணைந்து வீதிப் பாதுகாப்புச் சபையால் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவர் மஞ்சுள குலரத்ன,

இந்தச் சோதனை நடவடிக்கைகளின் போது கண்டறியப்படும் தரமற்ற தலைக்கவசங்களைத் தயாரிப்பவர்கள் மற்றும் விற்பனை செய்பவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தரமற்ற தலைக்கவசங்களை அணிவது, தலைக்கவசம் அணியாமல் செல்வதற்குச் சமமான ஆபத்தானது.

எனவே, பொதுமக்கள் அனைவரும் கண்டிப்பான முறையில் SLS தரச் சான்றிதழ் பெற்ற தரமான தலைக்கவசங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (ந-7)

## நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறப்பு

(கண்டி)

மத்திய மலைநாட்டில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (02) இரவு முதல் பெய்து வரும் கடும்மழை காரணமாக மகாவலி ஆற்றின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

நேற்று (03) திங்கட்கிழமை மதியம் முதல் ஐந்து வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் பொறுப்பதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் மகாவலி ஆற்றின் ஊடாக விக்டோரியா நீர்த்தேக்கத்திற்கு வினாடிக்கு 28,500 கன அடி நீர் திறந்து விடப்படுவதாகவும் அவ் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் அதிக மழை காரணமாக எதிர்வரும் நாட்களிலும் வான் கதவுகள் அடிக்கடி திறக்கப்படலாம் எனவும் அதனால் வெளியேற்றப்படும் நீரின் அளவு பெருமளவில் அதிகரிக்கக்கூடும் எனவே மகாவலி ஆற்றை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்களும் ஆற்றைப் பயன்படுத்துபவர்களும் மிகுந்த விழிப்புடன் இருக்குமாறும் பொல்கொல்ல நீர்த்தேக்கப் பொறுப்பதிகாரி அலுவலகம் மேலும் கேட்டுக்கொண்டுள்ளது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஒகஸ்ட் மாத இராசி பலன்கள்

## (01.08.2026-31.08.2026 வரை)

## வீண் செலவுகள் ஏற்படும்



**(மிருக சீரிடம் 3, 4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள்)**

**கிரகநிலை:** இராசியில் சூரியன், புதன், குரு - தைரிய வீரிய ஸ்தானத்தில் சுக்கிரன், கேது பாக்கிய ஸ்தானத்தில் ராகு, சந்திரன் - தொழில் ஸ்தானத்தில் சனி (வ) - அயன சயன போக ஸ்தானத்தில் செவ்வாய் என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** மற்றவர்களுக்கு உதவி செய்வதில் தயங்காத மிதுன இராசியினரே! உங்களுக்கு தேவையான உதவி அடுத்தவரிடம் இருந்து கிடைப்பது அரிது. இந்த மாதம் திடீர் கோபம் உண்டானாலும் சமாளித்து விடுவீர்கள். எடுத்த காரியம் உடனே முடியவில்லையே என்ற டென்ஷன் இருக்கும். எதிர்பாராத வீண் செலவு ஏற்படலாம். வீண்பழி வர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் வாடிக்கையாளர்களுடன் வாக்குவாதம் போன்றவை உண்டாகலாம். பழைய பாக்கி வசூலாவதில் தாமதம் உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளின் கெடுபிடிகளை சந்திக்க வேண்டியிருக்கும். குடும்பத்தில் திடீர் பிரச்சினைகள் தலை தூக்கலாம். கணவன், மனைவிக்கிடையே வாக்குவாதம், பிள்ளைகளின் செயல்களால் மனவருத்தம் போன்றவை ஏற்படலாம்.

வீட்டில் உள்ள பொருட்களை கவனமாக பாதுகாப்பது நல்லது. பெண்களுக்கு எப்படிப்பட்ட சிக்கலையும் சமாளிக்கும் மனப்பக்குவம் உண்டாகும். எந்த சூழ்நிலையிலும் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு எப்படி பாடங்களை படித்து முடிப்பது என்ற டென்ஷன் உண்டாகும். காரிய




**மிருக சீரிடம் 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் சில காரியங்கள் எதிர்மறையாக நடக்கும். நீங்கள் இதுவரை எதிர்பார்த்த காரியங்கள் எல்லாம் இழுபறியாக நிறைவேறாமல் இருந்தாலும், ஏதோவொரு வகையில் எப்படியும் நடந்துவிடும் என்று நம்பிக்கை இருக்கும்.

**திருவாதிரை:** இந்த மாதம் பழகும் மனிதர்களின் வார்த்தைகளை நம்புவதா வேண்டாமா என்ற சந்தேகம் சில சமயம் ஏற்படலாம். ராகு சஞ்சாரத்தால் வாழ்க்கையில் பிடிப்பும் ஆர் வமும் இல்லாமல் சலிப்பை உண்டாக்கினாலும், இராசி நாதன் பலத்தால் பாதிப்பை உண்டாக்காமல் காப்பாற்றி வருவார். இனிப்பும் கசப்பும் மாறிமாறி இன்றைய பலன்கள் இருக்கும்.

**புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள்:** இந்த மாதம் குடும்பத்தில் நிலவி வந்த பிரச்சினைகள் மறையும். சிலருக்கு திருமணம் மற்றும் சுப நிகழ்ச்சிகள் நடப்பதில் தாமதம் ஏற்படும். யாருக்கும் வாக்கு கொடுக்கும் முன் ஆலோசனைகள் செய்து கொள்ளவும்.

**பரிகாரம்:** ஸ்ரீ ஆண்டாள் சமேத ஸ்ரீ ரங்க நாதரை வணங்கி வர எல்லா பிரச்சனைகளும் தீரும். செல்வச் செழிப்பும், ஆரோக்கியமும் உண்டாகும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 25, 26, 27

**அதிர்ஷ்ட தினங்கள்:** 18, 19

## போக்குவரத்தில் கவனம் தேவை



**(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்)**

**கிரகநிலை** - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சுக்கிரன், கேது - அஷ்டம ஸ்தானத்தில் இராகு, சந்திரன் - பாக்கிய ஸ்தானத்தில் சனி (வ) - இலாப ஸ்தானத்தில் செவ்வாய் - அயன சயன போக ஸ்தானத்தில் சூரியன், புதன், குரு என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** அடுத்தவர் கொடுத்த வேலையை எப்பாடுபட்டாவது செய்து முடிக்கும்கடக இராசியினரே நீங்கள் உங்கள் வேலையை செய்து முடிப்பதில் ஆர்வம் காட்ட மாட்டீர்கள். இந்த மாதம் அடுத்தவர் குற்றச்சாட்டுகளில் இருந்து சாமர்த்தியமாக விடுபடுவீர்கள். திடீர் மனவருத்தம் ஏற்பட்டு நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. பணத்தேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டாலும் அதை சமாளித்து முன்னேறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளில் அலட்சியம் காட்டாமல் செயல்படுவது நல்லது. குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும் குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம்.

கணவன் மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. பிள்ளைகளை அவர்களின் போக்கிலேயே விட்டு பிடிப்பது நன்மை தரும். பெண்களுக்கு மற்றவர்களால் ஏற்படும் தொல்லைகளில்சிக்காமல்இருக்க கவனமாக செயல்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் மெத்தன போக்கு காணப்படும். மிகவும் கவனமாக படிப்பது கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.




**புனர் பூசம் 4 ஆம் பாதம் :** இந்த மாதம் பொருட்களை களவு கொடுக்க நேரிடலாம். உங்களின் உடமைகள் மீது கண்ணும், கருத்துமாக இருக்க வேண்டும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். அறிமுகம் இல்லாதவர்களின் வீட்டில் எதையும் உட்கொள்ள வேண்டாம்.

**பூசம்:** இந்த மாதம் நீங்கள் அமைதியாக இருந்தாலும் வீண் சண்டைகள் மற்றும் வீணான குழப்பங்கள் உங்களைத் தேடி வர வாய்ப்பு இருக்கிறது. தகுந்த வரன்கிடைத்து திருமண ஏற்பாடு இனிதே நடந்தேறும். வீடு, நிலம் மற்றும் வாகனங்கள் வாங்கலாம்.

**ஆயில்யம்:** இந்த மாதம் தொழிலில் நல்ல இலாபம் கிடைக்கும். ஆனாலும் கவனமுடன் நடந்து கொள்ளுங்கள். போட்டித் தேர்வுகள் சாதகமாக அமையும். சிலர் கல்வி பயில வெளியூருக்கு செல்ல வேண்டி வரும்.

**பரிகாரம்:** அருள்மிகு ஆதி பராசக்தி அன்னையை தரிசித்து வருவது உடல்ஆரோக்கியத்தை தரும். எதிர்பார்த்த காரியம் தாமதமாக முடியும். ஆனால் நல்ல பலனை தரும்.

**சந்திராஷ்டம தினங்கள் :** 1, 2, 28, 29

**அதிர்ஷ்ட தினங்கள் :** 20, 21, 22

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு...

இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

சென்னையில் உள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகர் கணேசநாதன் கேதீஸ்வரன், கோயம்பத்தூரில் உள்ள மில்லட் ஃபவுன்டேஷன் மற்றும் பிஸ்நெட் சொல்யூஷன் ஆகியவற்றின் நிர்வாகக் குழுவினரையும் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த ஜே.சி.ஜி நிர்வாகக்குழு உறுப்பினர்களையும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த முன்னணி தொழிலதிபர்களையும் கடந்த மாதம் 29ஆம் திகதி சந்தித்து கலந்துரையாடியதன் பேரிலேயே குறித்த விஜயம் இடம்பெறவுள்ளது.

சுமார் 20 தொழிலதிபர்கள் மற்றும் வணிகத் தலைவர்களை உள்ளடக்கிய இந்தக் குழுவினர், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16 - 24ஆம் திகதி வரை இலங்கைக்கு மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ள வர்த்தகப் பயணம் குறித்து துணை உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

வர்த்தகம், முதலீடு, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி, சுற்றுலா, விவசாயம், உணவு பதப்படுத்தல், உற்பத்தி மற்றும் தொழில் முயற்சி ஆகிய துறைகளில் உள்ள வாய்ப்புக்கள் குறித்து ஆராய்வதே இவ்விஜயத்தின் முக்கிய நோக்கமாகும். (ந-7)

## கற்றல் செயற்...

நடவடிக்கைகளும் பரீட்சைகளும் மறுஅறிவித்தல் வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகப் பேராதனைப் பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும் பல்கலைக்கழகத்தின் அத்தியாவசிய சேவைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய பல்கலைக்கழக நிர்வாகத்தினால் பின்வரும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமது சொந்தப் பிரதேசங்களுக்குப் பாதுகாப்பாகப் பயணிக்கக்கூடிய மாணவர்கள் அவ்வாறு புறப்பட்டுச் செல்ல முடியும்.

சீரற்ற வானிலை காரணமாக வீடுகளுக்குச் செல்ல முடியாத மாணவர்கள், 'சரஸவி மெதுர' விடுதியைத் தவிர்த்து, ஏனைய விடுதிகளில் பல்கலைக்கழக விடுதி நிர்வாகத்திற்கு அறிவித்துத் தங்கியிருக்க முடியும்.

அபாயகரமான விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்கள் பாதுகாப்புக்காகப் பல்கலைக்கழக விடுதிகளுக்கு வருகை தந்தால், அவர்களை ஏற்றுக்கொண்டு தேவையான பதிவுகளைப் பேணுமாறு விடுதி நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எந்தவொரு மாணவரும் விடுதிகளை விட்டு வெளியேறுமாறு வற்புறுத்தப்பட மாட்டார்கள்.

அத்துடன் தற்போதைய நிலைமை வழமைக்குத் திரும்பும் வரை பல்கலைக்கழக சமூகத்தினர் தமது பாதுகாப்புத் தொடர்பான அறிவுறுத்தல்களைப் பின்பற்றிச் செயற்படுமாறு பேராதனைப் பல்கலைக்கழக நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது. (ந-7)

## நாளுக்கு நாள்...

வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் 2026ஆம் ஆண்டில் இதுவரை நாடளாவிய ரீதியில் 86,386 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் டெங்குக் காய்ச்சலினால் இதுவரை 62 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஜூலை மாதத்தில் மாத்திரம் அதிகபட்சமாக சுமார் 30 ஆயிரம் பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், இம்மாதத்தின் முதல் சில நாட்களிலேயே ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாதிப்புகள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## எரிந்த நிலையில்..

தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் தடயவியல் நிபுணர்களுடன் இணைந்து விசாரணைகளில் ஈடுபட்டனர்.

குறித்த சம்[illegible] நீதிபதி பார்[illegible] உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் பல்வேறு கோணங்களில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-7,315)

## இயக்கச்சியில்...

மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த பெண்ணை ஹயஸ் வான் ஒன்று முந்திச் செல்ல முற்பட்ட வேளையிலேயே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்தவரை உடனடியாக மீட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இயக்கச்சி முகாவில் பகுதியைச் சேர்ந்த சந்திரன் சசிகலா (வயது- 49) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவர் அப்பகுதியில் உள்ள பல பொது அமைப்புகளில் பொறுப்பான பதவிகளில் இருந்து செயற்படும் ஒரு சமூக சேவையாளர் எனவும் நேற்றைய தினமும் பொதுச் சேவை கருதி இயக்கச்சி பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோதே இந்த விபத்து சம்பவித்துள்ளமையும் தெரியவந்துள்ளது. (ந-7,23,315)

## செம்..

அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறானதொரு பின்னணியிலேயே சிறியதொரு கால இடைவெளியின் பின்னர் இன்று அகழ்வுப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன

இதுவரையான காலப் பகுதியில் 480 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 479 என்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் 36 என்புக் குவியல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ந-7)

## சீரற்ற..

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நுவரெலியா[illegible] நேற்று (03) மாலை நேர நிலைவரப்படி 581 குடும்பங்களைச் சேர்ந்த 2,331 பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் துஷாரி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மண்சரிவில் சிக்கி இருவர் உயிரிழந்துள்ளனர். மேலும் வெள்ளப் பெருக்கில் சிக்கி இருவரும், மண்சரிவில் சிக்கி நால்வருமாக இதுவரை 6 பேர் காணாமல் போயுள்ளனர். மேலும், சீரற்ற காலநிலை காரணமாக மூவர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதுவரை 439 குடும்பங்களைச் சேர்ந்த 1,734 பேர் இடம்பெயர்ந்து தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சகல வசதிகளையும் நுவரெலியா மாவட்ட செயலகம் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஹட்டன், கொட்டகலை மற்றும் தலவாக்கலை ஆகிய பிரதேசங்களில் பல கிராமங்கள் தொடர்ந்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இருப்பினும், நேற்று மாலை நுவரெலியா நகரில் மழை குறைந்து வெள்ள நீர் சற்று வடிந்துள்ள போதிலும் வீடுகளுக்குள் இன்னமும் வெள்ள நீர் காணப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

மஹஜன சம்பத — திகதி 2026.08.03 — சீட்டிழுப்பு இலக்கம் 6268 — H 3 5 7 3 2 2
அத சம்பத — H 7 3 2 2 — சீட்டிழுப்பு இலக்கம் 0843

சுப தவசக் — திகதி 2026.08.03 — சீட்டிழுப்பு இலக்கம் 0384 — மீனம் 02 49 56 — 9704

தன நிதானய — திகதி - 2026.08.03 — சீட்டிழுப்பு இலக்கம் - 2298 — K 18 30 55 71 K

மெகா பவர் — திகதி 03/08/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2616 — L 23 04 28 39 58

ஜய — 2026.08.03 — 0536 — K 5 8 3 7

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4510 — சீட்டிழுப்பு திகதி 03.08.2026 — X 30 33 42 66

ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.08.03 — சீட்டிழுப்பு இலக்கம் 1577 — மீனம் 47 55 59 60 மீனம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வாசனா — 03.08.2026 — 0976 — F 8 2 1 8 9 9 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,763,869.60

சுப்பர் போல் — சீட்டிழுப்பு வாரம் 3242 — 25000 பணப் பரிசு 93663 — சீட்டிழுப்பு திகதி 2026.08.03 — தினம் திங்கட்கிழமை — 06 08 16 64 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,081,774.40

சனிதா — திகதி 03.08.2026 — வெற்றி வாரம் 5403 — 10 50 55 78 I — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,151,029.20 — ரூ. 50,000/- பணப்பரிசு 29308

சசிரி — வெற்றி வாரம் 1072 — சீட்டிழுப்பு திகதி 03.08.2026 — திங்கட்கிழமை — 07 08 35 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.4,104,600.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4954 — சீட்டிழுப்பு திகதி 03.08.2026 — தினம் திங்கட்கிழமை — 06 22 30 31 விருச்சிகம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00

லக்பதி — K 12 05 09 16 30 — சீட்டிழுப்பு வாரம் 2418 — 03.08.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.330,719,593.00

அட கோடிபதி — திங்கட்கிழமை — வெற்றி வாரம் 3068 — சீட்டிழுப்பு திகதி 2026.08.03 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,258,113.60 — 20 39 49 56 W

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சலூன் வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல
சிகையலங்கரிப்பு நிலையம் ஒன்றிற்கு
ஆண் வேலையாட்கள் தேவை.
வெளி மாவட்டத்தவர்களுக்கு
முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(தங்குமிடம், உணவு வழங்கப்படும்.)

**077 985 8327**

(8328)

## காணி விற்பனைக்கு

பொலிகண்டி வீதியில் பொலிகண்டி
கந்தவன முருகன் கோயிலில்
இருந்து 500m தூரத்தில் 1 பரப்பு
8 குழிநிலப்பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.

**077 247 7930**
**076 096 0281**

(8260)

# பயிலுனர்கள் தேவை

## 1. வெப் மெசின் பயிலுநர் - (ஆண்கள்)

## 2. கணனி பக்க வடிவமைப்பு பயிலுநர் - (ஆண்கள்)

- இரவுக்கடமை
- தகைமையும் விருப்பமும் உள்ளவர்கள் நேரில் வரவும்.

மேலதிக தொடர்புகளுக்கு **076 097 3121**

191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்
வலம்புரி நாளிதழ்


## வகுப்புகளுக்கு...

தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துதல். உயர்தரப் பரீட்சை சார் ஊக வினாப்பத்திரங்களை (Model/Predicted Question Papers) அச்சிடுதல் மற்றும் விநியோகித்தல், பரீட்சை வினாத்தாள் வினாக்களைத் தருவதாகவோ அல்லது அதற்குச் சமமான வினாக்களை வழங்குவதாகவோ சுவரொட்டிகள், பதாகைகள், கையேடுகள், இலத்திரனியல் அல்லது அச்சு ஊடகங்கள் மூலம் பிரசுரித்தல் அல்லது அவற்றைத் தம்வசம் வைத்திருத்தல் ஆகிய நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 22 ஆம் உறுப்புரையின் கீழ் பரீட்சைகள் திணைக்களதுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, இவ் ஒழுங்கு விதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

இக்கட்டளைகளை மீறிச் செயற்படும் எவரும் மேற்கண்ட பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாகக் கருதப்படுவதுடன், கடுமையான சட்ட நடவடிக்கைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் எனப் பரீட்சைத் திணைக்களம் கடுமையாக எச்சரித்துள்ளது.

இதேவேளை 2026 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 09 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் 2,532 பரீட்சை நிலையங்களில் நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது. (ந-7)


## பழைய பத்திரிகைகள் விற்பனைக்கு

பார்சல் கட்டுதல் உள்ளிட்ட தேவைகளுக்குரிய
பழைய பத்திரிகைகள் தேவையானவர்கள்
எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.
மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்கப்படும்.

தொடர்பு : **075 719 0110**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## வேலாயுதன் தேவசேனாதிபதி LLB, கொழும்பு (அருள் கல்வி வட்டம்) G.C.E.(O/L) க.பொ.த (சா/த) முற்றிலும் இலவசக் கருத்தரங்கு - 2026

(வட மாகாண ஆளுநரின் முழு அனுமதி ஆலோசனையுடன் நடைபெறவுள்ளது)

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 05.08.2026 புதன் | சாவகச்சேரி கலாசார மண்டபம், சாவகச்சேரி சிவன் கோவிலடி | மு.ப 08.30 - பி.ப 02.00 |
| 06.08.2026 வியாழன் | வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி அரங்கம், வட்டுக்கோட்டை | மு.ப 08.30 - பி.ப 02.00 |
| 07.08.2026 வெள்ளி | ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை | மு.ப 08.30 - பி.ப 02.00 |
| 08.08.2026 சனி | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (பெண்களுக்கு மட்டும்) | மு.ப 08.30 - பி.ப 02.00 |
| 09.08.2026 ஞாயிறு | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (ஆண் மற்றும் பெண் இருபாலாரும் ) | மு.ப 08.30 - பி.ப 02.00 |
| 10.08.2026 திங்கள் | மன்னார் நகர சபை மண்டபம் (மன்னார் மற்றும் மடு மாணவர்கள்) | மு.ப 08.30 - பி.ப 02.00 |
| 11.08.2026 செவ்வாய் | கிளிநொச்சி கூட்டுறவு சங்க மண்டபம் (கிளிநொச்சி தெற்கு வலய மாணவர்களுக்கு) | மு.ப 08.30 - பி.ப 02.00 |
| 12.08.2026 புதன் | கிளிநொச்சி கூட்டுறவு சங்க மண்டபம் (கிளிநொச்சி வடக்கு வலயம் மற்றும் துணுக்காய் வலய மாணவர்களுக்கு) | மு.ப 08.30 - பி.ப 02.00 |
| 13.08.2026 வியாழன் | குயின்ஸ் பேலஸ், மாஞ்சோலை, தண்ணீரூற்று | மு.ப 08.30 - பி.ப 02.00 |
| 14.08.2026 வெள்ளி | வவுனியா நகர சபை மண்டபம் | மு.ப 08.30 - பி.ப 02.00 |

- Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
- G.C.E.(O/L) கடந்தகால வினாவிடைத்தொகுப்பு புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.

**குறிப்பு : மாணவர்கள் பாடசாலை சீருடையுடனும் பொறுப்பாசிரியர்களுடனும் வருகை தர வேண்டும்.**

அனைவரும் கலந்துகொண்டு பயன்பெறவும்.

### செயலமர்வின் அமைப்பாளர்கள்

1. திரு.வேலாயுதன் தேவசேனாதிபதி L.L.B(சிரேஷ்ட சட்டத்தரணி), தலைவர் - EDCC (தொ.பே : 0771133400)
2. திரு.வே.சுந்தரேஸ்வரன் (இளைப்பாறிய பிரதி முகாமையாளர்) தேசிய லொத்தர் சபை தொ.பே: 0773850841
3. திரு.கந்தசாமி சக்திதரன், பொது செயலாளர் EDCC, இலங்கை, தொ.பே 0770703360
4. திரு.ப.சுதர்சன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் வலயக்கல்வி அலுவலகம்) தொ.பே: 0773144527
5. Mr.Vijasundaram Ramnath, Coordinating Secretary of Hon.,MP.M.Jegatheeswaran
6. கிருஷ்ணபிள்ளை சிவானந்தன் B.A, செயலாளர், இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தென்மராட்சி.
7. திரு.சூசை. ஜெபநேசன் தென்மராட்சி இணைப்பாளர். தொ.பே: 0771678150
8. P.கமலதாசன் (அதிபர் – யாழ்.ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்) – தேசிய ரீதியான வளவாளர், தரப்படுத்தப்பட்ட அதிபர் சங்கம் இணைப்பாளர் யாழ்ப்பாணம். தொ.பே: 0771116739
9. திரு.S.மணிமாறன் (ஆசிரியர் – யா/யாழ்.மத்திய கல்லூரி)
10. நாகராசா கேதீஸ்வரன் (செயலாளர் – இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், தென்மராட்சி தாய்ச் சங்கம் (மத்திய குழு உறுப்பினர்) )

(C-6165)

**இணை அனுசரணை கல்விக் காருணியன் E.S.P. நாகரட்ணம் ஐயா**
(கஜமுகன் ஹாட்வெயர்) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே :021 222 2833


# மரண அறிவித்தல்

பிறப்பு
08 - 06 - 1944



இறப்பு
03 - 08 - 2026

## திருமதி மோசஸ்பெனடிக்ற் பெனிக்னா றுக்மணி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான திருமதி மோசஸ்பெனடிக்ற் பெனிக்னா றுக்மணி அவர்கள் நேற்று (03.08.2026) திங்கட்கிழமை காலமானார்.

காலஞ்சென்றவர்களான கஸ்பார் நீக்கலஸ் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மோசஸ்பெனடிக்ற் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அமலதாஸ் ரணசிங்கம், கிறிஸ்ரி றெஜினோல்ட் இராஜசிங்கம் மற்றும் கில்பேட் ஜெயரட்ணம் (ஜேர்மனி), விக்ரர் ஜெயக்குமார், ஸ்ரெலா இந்திராணி, ஏஞ்சலாபேபி மற்றும் புளோரன்ஸ் றஞ்சினி (ஓய்வுபெற்ற உபஅதிபர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நாளை (05.08.2026) புதன்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுத்து பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

182, 2ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(C-6166)

தகவல் :
குடும்பத்தினர்
077 248 7638, 076 019 4073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.08.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.